# காற்றுவெளி

**10.11.2007**
**நினைத்த போது**
**வரும் இதழ்**

**என்னுடைய காலடியில்**
**இவ்வுலகம் எழும்பட்டும்**
**என்னுடைய காற்சுவட்டில்**
**இவ்வுலகம் நடக்கட்டும்**
**இருள்வெட்டிக் காடுவெட்டி**
**இகத்திற்கு நான் காட்டும்**
**அருட்டாத ஒற்றடியில்**
**அகிலம் நடக்கட்டும்**

**சில்லையூர் செல்வராசன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றுவெளி

காற்றுவெளி
(நினைத்த போது வரும் இதழ்)
ஆசிரியர்: ஷோபா
முகவரி: R. Mahendran,
34, Red Riffe Road,
Plaistow,
E13 0 J X
மின்னஞ்சல்:
mullaiamuthan_03@hotmail.co.uk
தட்டச்சு: கார்த்திகா.ம.

பதிப்பு: J R Print,
Hoe street,
Walthamstow,

இது கலை இலக்கியம் சார்ந்தது. காற்றின் திசையின் எகிறி எழுகின்ற தோணியின் துடுப்பு பற்றி யாரும் கவலை கொள்வதில்லை. நாமும் அவ்வாறே முயன்றோம். முயல்கின்றோம்.

நமக்கான புல்வெளி இன்னும் விரிந்தே இருக்கிறது. பறவைகள் தான் வந்து குந்தியிருக்கக் காணோம். இந்த இதழிலிருந்து தொடர்புபடுவர்களுக்கு மாத்திரமே அனுப்பி வைக்கப்படும். கண்காட்சிக்கென தயாரான இது.

நன்றி..
10-11-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வாழ்வு

என்ன வாழ்வு
எங்கள் வாழ்வு?
தமிழன் மிதிக்காத இடமில்லை
தமிழனுக்கு ஓர் இடமில்லை!

வீடு இருந்தும்
வீதிக்கு வந்தோம்
சொந்த நாட்டில்
அகதியாய்!
என்ன வாழ்வு
எங்கள் வாழ்வு..?

திசைகள் தெரிந்தும்
திரிகின்றோம்
உலகெங்கும் திக்கற்றவர்களாய்!
உலகின் மூத்த குடி -இன்று
அடுத்த நாட்டவன் பிடி!

கல் தோன்றா காலத்தில்
தோன்றிய இனம்
கணிணி யுகத்திலும்
நோகுது மனம்..!

தமிழ் வளர்ந்த சங்கமெங்கே..?
தமிழ்ச் சான்றோன் எங்கே?
தமிழ்க் கடவுள் எங்கே?
மூவேந்தன் எங்கே..?

மீண்டும் வாருங்கள்
மீட்கப்பட வேண்டும்
எங்கள் மூத்தகுடி

ஈழபாரதி
புதுக்கோட்டை

# உன் ஈரமனம் தருவாயா?

வாழ்க்கை உதட்டினில் நீ,
புதுப் புன்னகையாய் வந்தவள்!
மனத் தாமரையை
மலர வைக்கும்
சூரியனாய் எழுந்தவள்

உன் அற்புத
அழகைக் கண்டு
அழுதழுதுதான்
ரோஜாவும் முகம் சிவந்ததுவோ?

வானத்து வெண்நிலாவும்
வணக்கம் கூறும் உனக்கு
பின் வாழ்துரைக்குமுனக்கு,

பார்த்த விழிகளைப்
பாதி வழியில் நிறுத்தி வைப்பாய,
கலையே சிலை எழிலே!

உன் அழகு வதனம்
போன்றதொரு வசீகரத்தை இனி,
நான் என்,
விழிகளுக்கு வழங்குவேனா?
நீ வருவாயா உன்
ஈரமனம் தருவாயா?...


கவிஞர் அ. பேனாட்
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம் தரும் பார்வை





இதயத்தின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுப்பதே கவிதை. உணர்ச்சியின் வண்ண வார்ப்பே கவிதை. இலக்கியத்தின் இலங்கு சுடராகத் தெரிவதும் கவிதையே! இந்த ஊற்றிலிருந்தும் உணர்வுகளிலிருந்தும் கலைத் தாகத்தை சிலரே தீர்த்துக் கொள்கின்றனர். கவிதைகள் இதயத்தில்இருந்து வெளிப்பட்டு மலர்வதைக்கண்டு அதனை இரசித்து வாழ்பவர்கள் பலர். கண்டும் காணாது செல்பவர் சிலர். சிந்தனைக்கு உரமிட்டு கவியாக மனிதத்தை நேசிக்காத கல்நெஞ்சங்களையும் நெகிழ வைக்கும் கலையுள்ளங்கள் பலர் எம்மிடையே தோன்றிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வகையில் இளம்பிறையான சுதாகினியைக் குறிப்பிடலாம்.

அன்னையை பெண் விடுதலையை பெண் சமத்துவத்தை ஏக்கம் எதிர்பார்ப்புகள் என்று 14 கவிதைகளிலும் பெண்களின் உணர்வுகளை நிறையவே பேசி மலர்கிறார் சுதாகினி.

ஒரு விமர்சகன் என்பவன் ரசனை என்பதனை மீறி படைப்பின் ஆழத்திற்குச் சென்று அதன் அதன் ஆன்மாவைக் கண்டறிய வேண்டும் என்கிறார்கள். ஒரு படைப்பு செழுமை அடைந்ததிற்கான தொழில் நுட்பத்தை பேசியாகவேண்டும் என்கிறார்கள். அழகியலையும் நுண்ணுணர்வுகளையும் பேச வேண்டும் என்கிறார்கள்.
எங்கள் வானத்தில் நாங்கள் தான் சூரியர்!

இருண்ட வாழ்வு வெளித்திட
குனிந்தது போதும்! நிமிர்ந்துவிடு! என்கிறார் சுதாகினி.

இளம் படைப்பாளரான சுதாகினியின் கன்னிப் படைப்புக்களால் பசுந்தரை சுனையூற்றைத் தேடும் பயணத்தை மேற்கொள்வது போன்று அடையாளம் தெரிகிறது.

யதார்த்தம் என்று கூறிக்கொண்டு போலியாக உண்மைக்குப் புறம்பானதைச் செய்யும் சமூகத்தை உணர்வுபூர்வமாக நொந்துகொள்கிறார் சுதாகினி.

வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலுமாய்
இளசுகள் கருகையிலே
அங்கே டயானா இறந்தமைக்காய்
இங்கே இரங்கலுரை நிகழ்த்துகின்றார்.

இங்கே சுதாகினின் தூர நோக்கையும் அவரின் ஆன்மாவின் துடிப்பையும் அவதானிக்க முடிகிறது.
கவிதையை வாசிக்கும்போது மனதுள் நிகழும் மனச் சலனங்களை

ஆகா! ஆண்டவன் படைப்பில்
இத்தனை மகிமையா?
எனக்குள் எண்ணி நானே மகிழ்ந்தவேளை
எங்கோ ஒரு வெடியோசை
ஓ! மனிதர்கள் தம் இருப்பையும்
அடையாளப்படுத்துகிறார்கள்

என்று தனது உணர்வுகளை மொழியால் உருவம் கொடுத்து ஒரு வளர்சிதை மாற்றங்களை இக்கவிதையில் பார்க்க முடிகிறது.

அடையாளம் கவிதைத் தொகுதி தரும் அட்டைப்படத்தை கவிதைகளின் தாகத்தை வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் அமைத்திருக்கலாம் போல் தோன்றுகிறது சுதாகினி.

விமர்சியுங்கள் எழுத்தாற்றல் வளர்வதற்கு ஆனால் காயப்படுத்தாதீர்கள் என்று அடையாளம் மூலம் அடையாளப்படுத்தியிருக்கிறார் சுதாகினி. உண்மைதான். பெண்களின் படைப்புக்களை வரவிடுங்கள். எழுத வரும் பெண்களே குறைவு. விமர்சனம் என்ற பயம் காட்டாதீர்கள். சிலர் தரமற்ற பெண்களின் படைப்புக்களை உள்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும் என்றும் கருத்துக் கூறுகின்றார்கள்.

சுதாகினியிடம் கவியுள்ளம் ஊடுருவிக்க கிடக்கிறது. அனுபவம் தேடல் வாசிப்பு தெளிவு இருக்குமிடத்து தரமான படைப்புக்கள் வர வாய்ப்பிருக்கிறது. நிட்சயமாக. கவிதைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் காத்திரமான பணியைச் செய்திருக்கிறார் இனிமேலும் செவ்வனே செய்வார் எனத் தெரிகிறது.

நவஜோதி ஜோகரட்னம்.
லண்டன் 13.3.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கைகள



பூங்காற்றையும் தென்றலையும்
கேட்டெழுதிய கவிதைகள்
தொலைந்து போயின!

புயல் கடக்கும் கரையிலெல்லாம்
என் கவிதைகள்-
மையம் கொள்கின்றன!

மல்லிகை மணம் வீசும்
கூந்தல் வாசமும்
புன்னகை தவழும்
முகமும் - மகிழ்வூட்டுவதற்கு பதிலாய்
பயமுறுத்துகின்றன!

குடிக்கத் தண்ணீரில்லாத
தேசத்தில் - செடிக்கு
நீரூற்றப் போதிக்கும்
நம் புத்தர்கள்!

ஊட்டி ஊட்டியே
தந்தையின் கைகள்
சோர்ந்து போக
பசித்தழும் இன்னொரு மகவுக்கு
இரத்தம் கசியும்
உணவுப் பருக்கைகள்!

வாழ்வதற்காய் வந்தவர்கள்
வீழ்ந்துவிட்ட சோகத்தில்
கதறி அழவும் பயந்து
விரக்தியாய் சிரிக்க
"அவர்களுக்கென்ன சிரித்து
வாழ்கிறார்கள்" எனப் -
பட்டயமும் தருகிறார்கள்!

நூறு என்ன ஆயிரம்
ஆண்டானாலும்
வாழ்க்கைக்கு அர்த்தம் தரும்
வாழ்வு அமையுமா?

தொலைந்த
வாழ்க்கைத் தேடும்
கூனலான முதுகுக்குள்
இன்னும் நம்பிக்கைகள்..
தன்னம்பிக்கையாய்.!

## கிழக்கேன் விடிகிறதோ..!?

உலகமே இருண்டு போச்சு
ஊமைகள் நிலையு மாச்சு..!
நீதி அழிந்து போச்சு-மக்களோ
நிர்க்கதி நிலையும் ஆச்சு..!-ஆனால்
கிழக்கேன் விடிகிறதோ--உலக
நீதி சபைகளேன் கூடுகிறதோ..!?

மக்கள்..
பசிக்கு உணவில்லை படுத்துறங்க வீடில்லை
பச்சிளங் குழந்தைக்கு பால்மா தானுமில்லை
நோயிக்கு மருந்தில்லை மனிதர்க்கு மதிப்பில்லை
இதைத் தட்டிக்கேட்டிட உலகுக்கு கண்ணில்லை..!
நெஞ்சில் துணிவில்லை..!
ஆனால்
நீதியில்லா உலகுக்கு
கிழக்கேன் விடிகிறதோ..!?
உலக சபையேன் கூடுகிறதோ..!?

அகிலமெல்லாம் இன்று
ஆயுதம் செய்வோன் பையில்
அவன் நினைப்பெல்லாம் மானிடத்தை
அழிக்கின்ற ஆயுதத்தின் கையில்
பாரெல்லாம் பறக்கின்ற விமானங்கள்-அதன்
பாரமெல்லாம் மனித அழிவுக் குண்டுகளே..!
இதைக்காணா உலகுக்கு..
கிழக்கேன் விடிகிறதோ..!?
உலக சபைகள் ஏன் கூடுறதோ?!?
அநியாயத்தை தடுத்திட
அதிகாரம் இல்லா சபைகள்..!
ஆள்வோனை தட்டிக் கேட்க
ஆண்மை இல்லா தலைமைகள்.
கூடியென்ன பலன்..!? கூடி என்ன பலன்..!?
இவர்கள் குதூகலித்து காப்பி..
குடித்துமகிழவா..? கிழக்கு விடிகிறது?!
கிழக்கேன் விடிகிறது..!?
கிழக்கேன் விடிகிறது..!!

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்துக் குடும்பம்!

சிறுகதை
வண்ணை தெய்வம்

இப்பொழுது நகரங்களின் முகங்களெல்லாம் ஆண்டுகள் நகர நகர னருமடைந்த இளம் பெண்களைப்போல பள பளவென் மெருகேறிக்கொண்டு வருகின்றன! சாதரணமாக இருந்த வீடுகளெல்லாம் அடுக்குமாடி வீடுகளாக மாறிவிட்டன! வீதிகளெல்லாம் விரிவாக்கப்பட்டு சாலைகளாக மாறிவிட்டன! ஆனாலும் மக்கள் ஒருவரோடொருவர் உரசிக்கொண்டுதான் நடக்கவேண்டியிருக்கின்றது! வாகனங்களை நிறுவதற்கு இடமில்லாமலேயே இருக்கின்றது! இத்தோடு நட்சேத்திர விடுதிகள்! நாகரீகத்தின் உச்சத்தைப் பிரதிபலிக்கும் பெண்கள் அழகுபடுத்தும் நிலையங்கள்! இப்படியாக நகரங்கள் எல்லாம் பள பளஇவென்றே மாறிவருகின்றன. ஆனால் கிராமங்களும் கிராம மக்களும் பழமை மாறாமல் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றனர்! அப்படியான ஒரு கிராமத்தில் வாழ்கின்ற குடும்பங்களில் கோபாலனின் குடும்பமும் ஒன்று.

கோபாலனுக்கு திருமணாகி இருபத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன. அவனுடைய மனைவி மங்களத்துக்கு பெயருக்கு ஏற்றாற்போல் அழகான மங்களகரமான முகம். கோபாலனின் தோற்றத்திற்கும் நிறத்திற்கும் மங்களம் பொருத்தானவள் இல்லையென்றுதான் எல்லோரும் சொல்லிக்கொள்வார்கள்! ஆனால் உடல்ப் பொருத்தமோ? நிறப் பொருத்தமோ? வாழ்க்கைப்பொருத்தமாக அமைந்துவிடுவதில்லை என்பதற்கு இந்தத் தம்பதிகளை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

இந்தத் தம்பதிகளுக்கு இப்பொழுது ஒன்பது பிள்ளைகள்! பிறக்கும்போதே இறந்துபோன மூன்று பிள்ளைகளும் இருந்திருக்குமானால் கணக்கு ஒரு டசினாக இருந்திருக்கும்! ஆனாலும் கோபாலனோடி அல்லது மங்களமோஇ இதைப்பற்றிக் கவலைப்பட்டதே இல்லை இவர்களின் அன்னியோன்னியமான வாழ்க்கைக்கு சாட்சியமாக இப்பொழுதும் மங்களம் நாலு மாத வயித்துப் பிள்ளைத்தாச்சியாகத்தான் இருக்கின்றாள்!. ஊரிலுள்ளவர்களெல்லாம் “என்னடி மங்களம் இப்பிடி வருசம் தவறாமல் பிள்ளையளைப் பெத்துக்கிறியே இதுகளையெல்லாம் வளத்து ஆளாக்க வேண்டாமா?” என சொல்லும்போதெல்லாம் “ஆண்டவனாப் பாத்தக் கொடுக்கிறான்” என்று பழியை கடவுள்மீது போட்டுவிடுவாள்!.

ஆரம்பத்தில் இருந்தே பிறந்ததெல்லாம் வரிசையாக பெட்டைப் பிள்ளைகளாகவே பிறந்துவர ஒரு ஆம்பிளைப்பிள்ளை வேண்டும் என்ற ஆசையில் “அடுத்தது பொடியனாப் பிறக்கும் அடுத்தது பொடியனாப் பிறக்கும்” என்று பெத்து ஆறாவதாகத்தான் ஆம்பிளைப்பிள்ளை பிறந்தது. அதற்குப்பிறகும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை! பின்பும் ஆண்டவன்மீதே பழியைப் போட்டுக்கொண்டார்கள்.

மூத்தவள் முத்தளகிக்கு இப்பொழுது வயது இருபத்திநாலு! காலாகாலத்தில் கலியாணம் செய்து கொடுத்திருந்தால் அவளும் இப்பொழுது இரண்டு மூண்டு பிள்ளைகளுக்குத் தாயாகியிருப்பாள்!. இரண்டாவது பெண் பவளம் மூண்டு வருசங்களுக்கு முன்னதாக வயலுக்கு வேலைக்கு போன இடத்தில் எவனையோ காதிலிச்சு அவன்கூட ஓடிப்போய் இப்பொழுது இரண்டு பிள்ளைகளுக்கு தாயாக இருக்கிறாள்!.

கோபாலனுக்கு நிரந்தர வேலையென்று எதுவும் கிடையாது. காலத்திற்கேற்றமாதிரி வயல் வேலைகள் கிடைக்கும். அதுமாத்திரமல்ல ஊருக்குள் வீடு மேய்தல்இ வேலி அடைத்தல்இ விறகு கொத்துதல்இ இப்படியாக எந்த வேலையானாலும் கோபாலனனைத்தான் அழைப்பார்கள். காரணம் இரண்டுபேர் செய்கின்ற வேலையை கோபாலன் தனி ஒருவனாகச் செய்து முடிப்பான்! இந்தக் கடுமையான உழைப்பிற்காகவே ஊரில் உள்ளவர்கள் இவனை விரும்பி வேலைக்கு அழைத்துக் கொள்வார்கள்.

இப்படியாக கஸ்றறப்பட்டு உழைக்கும் பணத்தில் ஒரு பகுதி மாலையானதும் கள்ளுக் தவணைக்குப் போய்விடும். மீதியில்த்தான் மங்களம் பிள்ளையளுக்குச் சமைத்துப் போடவேணும்இ பள்ளிக்கூடம் போற பிள்ளையளுக்கு புத்தகம் கொப்பி வாங்கிக் குடுக்கவேணும்இ நல்லநாள் பெரியநாள் வந்தா புதுத்துணி வாங்கிக் குடுக்கவேணும்இ இதெல்லாம் மங்களத்தின் சாமர்த்தியமான செயல்ப்பாடுகள்.

ஒரு பிள்ளையேனும் ஐந்தாம் வகுப்புக்குமேல் பள்ளிக்கூடம் போனது கிடையாது! அதற்குமேல் படிப்பிப்பதற்கு அவர்களிடம் வசதியும் இல்லை. அந்தக் கிராமத்தில் மேலே படிப்பதற்கான பள்ளிக்கூடமும் இல்லை! “பொட்டைச்சியள் படிச்சு என்ன கலெக்டர் வேலையா பாக்கப் போகுதுகள்” எண்டு தங்களுக்குள்ளேயே அவர்கள் சமாதானம் சொல்லிக்கொள்வார்கள்!.

வீட்டு நிலமையைக் கருத்தில் கொண்டு வயல் வேலைக்காலங்களில் நாத்து நடஇ களை பிடுங்கஇ அறுவடை செய்யவெனஇ மங்களமும் மூத்த இரண்டு பிள்ளைகளும் வேலைக்குப் போவதுண்டு. இதில் மங்களம் கூடிய நாட்கள் வயித்துப் பிள்ளைத்தாச்சியாகவே இருப்பதால் அவளை வேலைக்க் கூப்பிடமாட்டார்கள்!. இப்படி தனியாக முத்தளகியும் பவளமும் வேலைக்குப் போன நேரத்தில்த்தான் பவளம் ஒருவனைக் காதலிச்சு ஓடிப்போய்விட்டாள். அதன் பின்னர் கொஞ்சநாள் முத்தளகியையும் வேலைக்கு விடாமல் மறித்து வைத்தார்கள். எத்தனை நாளைக்கு? அடுப்பை பூனை விறாண்டாத் தொடங்க இப்பொழுது மறுபடியும் அவள் வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும் மாலையானதும் கோபாலன் வெறியில்த்தான் வீட்டுக்கு வருவான்! பிறகென்ன மனைவி மங்களத்துக்கு சொல்லக்கூடாத வார்த்தைகளினாலெல்லாம் மங்களம்தான்! சில சமயங்களில் அடி உதைகளும் உண்டு!. இந்த சண்டை சச்சரவுகள் எல்லாம் அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல வீட்டில் பிள்ளைகளுக்கும் பழகிப்போனவைதான். ஆனாலும் மூத்தவள் முத்தளகி மட்டும் தனக்குள்ளேயே எண்ணிக்கொள்வாள் "அப்பா ஒவ்வொரு நாளும் மூக்குமுட்ட குடித்துவிட்டு வெறியில்த்தான் வருகிறார். ஒவ்வொரு நாளும் அம்மாவுடன் சண்டையும் பிடிக்கிறார். பிறகு படுக்கும்போது மட்டும் எப்படிச் சமாதானமாகிப் போகிறார்கள்?!" என்பதுதான்.

தினமும் மாலையில் அப்பா வெறியில் வருவதும்! தாயுடன் சண்டை பிடிப்பதும்! பின்பு சாப்பிடுவது! படுப்பது! மறுநாள்க் காலையில் எதுவுமே நடக்காததுபோல அப்பா அப்பாவியாக இருக்க இப்பொழுது அம்மாவின் குரல் பலமாக இருக்கும்! இவர்களைப் புதிதாகப் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்! ஆனால் அந்த அயலில் வசிப்பவர்களுக்கு இதெல்லாம் பழகிப்போன சமாச்சரங்கள்!.

அம்மா அடிக்கடி பிள்ளை பெத்துக்கொள்வதைப்பற்றி வயலில்லேலை செய்யும்போது மற்றவர்கள் கேலியாக பேசிக்கொள்வதைக் கேட்க முத்தளகிக்கு வெட்கமாகக்கூட இருக்கும்! இருந்தும் என்ன செய்வது? யாரோடு இதைப்பற்றி பேசுவது? வீட்டில் பிள்ளைகள் அழும்போது தூக்கி வைத்துக்கொள்ளும்படி தாய் சொல்லும்போது மட்டும் "உனக்கென்ன நீ பெத்துப் போட்டுக்கொண்டே இருப்பாய்! நாங்கள்தான் தூக்கவேணுமஇ பாக்கவேணும்" எண்டு புறுபுறுக்கும்போது மட்டும் தாய் தன்னை ஒரு மாதிரியாகப் பாப்பதை தான் பாக்காதது போலவே சென்றுவிடுவாள் முத்தளகி.

மாலையில் தந்தை வீட்டுக்கு வரும்போது குடித்துவிட்டு மட்டும் வருவதில்லை! வெறி குறையும்போது மீண்டும் புதுப்பித்துக்கொள்ளவென தனியாக கையில் ஒரு போத்தில் கள்ளுடன்தான் வருவார். பின்பு தாய்க்கும் தகப்பனுக்கும் சண்டை தொடங்குவதற்குக் காரணமே தேவையில்லை! இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இவர்களுக்கு கலியாணம் நடக்கும்போது அம்மாவுக்கு சீதணமாகக் கொடுத்த நகையில் ஒரு பவுண் குறைந்ததிலிருந்து நேற்று வைச்ச கறிக்கு உப்புக் காணாததுவரை எல்லாம் உப்புச்சப்பில்லாத காரணங்களாகத்தான் இருக்கும்!. இவையெல்லாம் முத்தளகிக்கு சலிச்சுப்போனவை!.

வழமையாக ஒழுங்கை முகப்பில் வரும்பொழுதே அப்பா வீட்டுக்கு வரகின்றார் என்பது வீட்டில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல அயலில் உள்ளவர்களுக்கே தெரிந்துவிடும்!? எப்படியென்றால் அப்பா ஏதாவதொரு பழைய பாட்டை பாடிக்கொண்டுதான் வருவார். சில வேளைகளில் அவர் பாடுவதற்கு மறந்தாலும் எங்கள் ஒன்பது பேரோடு சேர்ந்து இன்னொரு பிள்ளையாக வீட்டில் வளர்ந்துவரும் ஜிம்மி என்ற நாய்க்கு எப்படித்தான் அப்பாவின் வாசனை மணக்கின்றதோ தெரியாது ஒழுங்கைக்கே தேடிச்சென்று அவரின் காலைச் சுத்திச் சுத்தி செல்லமாக முனுகிக்கொண்டே வீட்டுக்கு அழைத்துவரும்!.

அன்றொருநாள் பாட்டுச் சத்தம் கேட்கவில்லை! ஜிம்மி மட்டும் முனுகியபடி ஒழுங்கைக்கு ஓடியது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது! வேலிப் படலையைத் திறந்துகொண்டு அப்பா வருவதைப் பாக்கவே எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது! இண்டைக்கு அப்பா குடிக்கவில்லைப்போலை இருந்தது! காலமையிலை வீட்டைவிட்டு போன சாதாரண அப்பாவாகவே அன்று மாலையும் வந்திருந்தார்! இது ஆச்சரியமான விசயம்தானே!

"பிள்ளை குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டா" என்று சொல்லிவிட்டு முத்தத்தில் போட்டிருந்த சாக்குக்கட்டிலில் சோர்வாக அமர்ந்துகொண்டார். வெறியில்லை! அம்மாவுடன் கொழுவல் கதையில்லை! வீடே அமைதியாக இருந்தது! முத்தளகி செம்பில் தண்ணியைக் குடுக்க ஒரு முடறைக் குடித்துவிட்டு எதுவும் பேசாமல் இருந்த தகப்பனைப் பாக்க முத்தளகிக்கு மட்டுமல்ல மங்களத்துக்கும்தான் பாவமாக இருந்தது!.

"இண்டைக்கு ஆற்றை முகத்திலை முளிச்சேனோ தெரியேல்லை வேலை ஒண்டும் கிடைக்கேல்லை! அதுதான் ஒரு இடமும் போகேல்லை. நேரா வீட்டை வந்திட்டன்!" நாங்கள் கேக்காமலேயே ஒரு இடமும் எண்டு அவர் சொன்னது கள்ளுத் தவறணையைத்தான்!.

மேலும் ஒரு முடறு தண்ணியைக் குடித்துவிட்டு மீண்டும் தலையைக் குனிந்துகொண்டார் கோபாலன். புருசனின் இந்தப் பேச்சுக்கு காதைக் குடுத்துக்கொண்டிருந்தாலும் எதுவுமே கேக்காதமாதிரி அடுப்போடு மல்லுக்கட்டிக்கொண்டிருந்தாள் மங்களம். ஜிம்மி மட்டும் வழமைபோல கோபாலனின் காலடியிலேயே படுத்துக் கிடந்தது.

அக்கம்பக்கத்து வீட்டுக்காறர்கூட மெதுவாக எட்டிப்பாக்கத் தொடங்கிவிட்டார்கள். "என்ன இண்டைக்கு இவ்வளவு நேரமாகியும் கோவலன் வீட்டுக்கு வரலலைப்போலைகிடக்கெண்டு" விசாரிப்புக்கள் வேறை!. கோபாலன் மெல்ல எழும்பி குசினிக்குள் போக அடுப்போடு போராடிக்கொண்டிருந்த மங்களம் திரும்பி புருசனைப் பாக்க... கோபாலன் முகட்டைப் பாக்க.... மங்களத்துக்குப் பரிதாபமாகவும் இருந்ததுஇ சிரிப்பாகவும் இருந்ததுஇ புருசன் குடிக்காமல் வந்திருப்பது மங்களத்துக்கும் பிடிக்கவில்லைப்போலும்! சமைப்பதுக்குத் தேவையான சில்லறைச் சாமன்கள் போட்டு வைச்சிருக்கிற அடுக்குப்பெட்டிக்குள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்ரை சில்லறைச் சேமிப்பிலை இருந்து பத்து ரூபாயை எடுத்தவள் "என்னப்பா சும்மா முகட்டை முகட்டைப் பாத்துக்கொண்டு நிக்கிறாய் இந்தா தவறணை பூட்டுறதுக்கிடையிலை போய் ஏதாவது ஊத்திக்கொண்டு வாவன்" எண்டு அந்தக் காசைக்குடுத்த மறு நிமிசம் அங்கு கோபாலனைக் காணவில்லை!

முத்தளகிக்கு மூச்சே நிண்டுவிடும்போலை இருந்தது!. "என்ன இது? விசர் மனுசியாய் இருக்குது! இண்டைக்கெண்டாலும் சண்டை பிடிக்காமல் சந்தோசமாய் இருப்பமெண்டில்லாமல் அந்தாள் குடிக்கிறதுக்கு இவவே காசு குடுத்துவிடுகிறாவே?!" எண்டு முணுமுணுத்தபடி தாயை ஆச்சரியமாகப் பாத்தாள்!

பிறகென்ன? கொஞ்ச நேரத்தாலை கோபாலன் தியாகராஜபாகதவரின் "யானைத் தந்தம் போலே நிறைநிலா" எண்ட பாட்டோட இவர வழமைபோல ஜிம்மி சந்தோசத்துடன் அழைத்து வந்தது!. வீட்டுக்கு வந்தவர் இண்டைக்கு ஆரோ வேலைக்கு வரச்சொல்லிவிட்டு வேலை குடுக்காததுக்காக அதுபற்றி எதுவுமே தெரியாத மங்களத்துடன் அதுக்காக கத்திக்கொண்டிருந்தார்!.

தூக்கம் வராமல் பாயில் புரண்டுகொண்டிருந்த முத்தளகிக்கு இப்பொழுது ஒன்று விபரமாக விளங்கியது. ஒரு நாளெண்டாலும் புருசனிடம் திட்டு வாங்காவிட்டால் தாய்க்கு அண்டைய நாள் நல்ல நாளாய் அமைவதில்லைப்போலும்! இல்லாட்டி தானே கசைக் குடுத்து குடிக்கவைச்சு இப்படிப் பேச்சும் வாங்குவாளா? இதைத்தான் கம்பைக்குடுத்து அடி வாங்கிறது எண்டு சொல்லுறதோ?!

இப்பொழுது சண்டை முடிஞ்சு சாப்பாடு முடிஞ்சு படுக்கைக்குப் போய்விட்டார்கள். சிறிது நேரத்துக்கு முன்னர் தாயை சத்தம் போட்டுத் திட்டிக்கொண்டிருந்த தகப்பன் இப்பொழுது தாயின் காதில் ஏதோரகசியமாக முணுமுணுப்பது முத்தளகிக்கும் கேட்டது!. "ம்! இதுக்கு மட்டும் குறைவில்லை! இப்படித்தானே இருபத்தைஞ்சு வருசம் கழிஞ்சிருக்கு! முத்தளகி தனக்குள் முணுமுணுத்துக்கொண்டாள்!. அவளுக்குத் தூக்கம் வரவில்லை! அவளின் நினைவுகளில் பவளம் வந்து போய்க்கொண்டிருந்தாள்!

பவளம் யாரோ ஒருவனுடன் ஓடிப்போனபோது எல்லோருடனும் சேர்ந்து முத்தளகியும்தான் அவளைத் திட்டியிருக்கிறாள். இப்பொழுது யோசித்துப் பாக்கையில் "பவளம் இங்கு இருந்தும் மட்டும் என்ன சுகத்தைக் கண்டிருக்கப்போகிறாள்? ஏதோ இப்பொழுது இரண்டு பிள்ளைக்குத் தாய் எண்ட சுகத்தையெண்டாலும் கண்டுவிட்டாள்" எண்டு அவளின் செயலைத் தனக்குள் நியாயப் படுத்திக்கொண்டாள்!. அவளுக்குத் தூக்கம்வர நடுச்சாமம் ஆகிவிட்டது.

மறுநாள்க் காலையில் நேற்று இரவு எதுவுமே நடக்காததுபோல வீடு வலு அமைதியாக இருந்தது!. வேலை தேடிப் புறப்படவிருந்த தந்தையிடம் தாய் மெதுவாக தனக்கு ஏதோ ஆசைச் சாப்பாடு வாங்கிக்கொண்டு வரும்படி கூறியதும் காத்துவாக்கில் முத்தளகியின் காதுகளில் விழுந்தது. அதைக் கேட்டும் கேக்காததுபோல தந்தை வெளியெறிக்கொண்டிருந்தார்.

தம்பி தங்கைகளும் பள்ளிக்கூடம் போய்விட்டார்கள். முத்தளகியும் மங்களமும்தான் வீட்டில். மங்களத்தின் வயிற்றில் குழந்தை நாலு மாதம்தான்! எண்டாலும் வயிறு சற்று பெரிதாகவே இருந்தது. "இந்தமுறையும் ஆண்டவன் பொட்டைப் பிள்ளையைத்தான் தரப்போறானாக்கும்" வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கும் காரணம் கடவுள்தான் என்பதுபோல மீண்டும் கடவுளின்மேல் பழியைப் போட்டுக்கொண்டு வயித்தைத் தடவியபடியே திண்ணைக் குந்தில் அமர்ந்தாள் மங்களம்.
முத்தளகி தன்னை மறந்து வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்!

"என்னடி சிரிக்கிறாய்? என்ரை வண்டியைப் பாக்க உனக்குச் சிரிப்பாயிருக்காக்கும்!" மங்களம் மகளைப் பாத்துச் சின்னக் கோவத்துடன் கேட்டாள்.

"இல்லையம்மா எனக்கும் ஆசையா இருக்கு!" முத்தளகியின் பதில் வித்தியாசமாக இருந்தது.

"என்ன ஆசையாய் இருக்கு?" புரியாமல் கேட்டாள் மங்களம்!.

"அம்மா! எனக்கும் உன்னை மாதிரி அம்மாவாக ஆசையாயிருக்கு!" இப்படிச் சொல்லிவிட்டு தலையைக் குனிந்துகொண்டாள் முத்தளகி.

பதில் சொல்ல முடியாமல் மங்களம் சிலையாகிவிட்டாள்! திருமணம் செய்து பிள்ளைகளைப் பெறுவது மட்டுமல்ல வாழ்க்கை. பெத்த பிள்ளைகளை உரியகாலத்தில் உரிய முறையில் வாழவைப்பதிலும் வாழ்க்கையின் தத்துவம் அடங்கியிருக்கின்றது!. இதை கோபாலன் மங்களம் போன்றவர்கள் எப்பொழுது புரிந்துகொள்ளப் போகின்றார்கள்?.

நகரங்கள் எவ்வளவோ முன்னேறிவிட்டது! கல்வியில் திட்டமிட்டு வாழ்க்கையை நடத்துவதில்இ இப்படி எத்தனையோ வழிகளில் எல்லாம் நகரத்து மக்கள் எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள்! கிரமங்களில் வாழ்கின்ற மக்கள் மட்டும் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றார்கள்!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு அமெரிக்க வீரனுக்கு ....!

ஓ வீரனே
தபாலிலே வந்திருக்கிறதா
உனது குழந்தையின்
முத்தங்கள்.
மெத்தச் சந்தோசத்தோடு
வாங்கிக் கொள்
ஆனால்
உன் துாப்பாக்கி
எத்தனை குழந்தைகளின்
மழலைச் சத்தங்களை நிறுத்தியிருக்குமோ .. ?

உனது மனைவியின்
வெப்பம் நிறைந்த
ஏக்கப் பெருமூச்சுகளை
எப்படி அறியப் போகிறாய் ... ?

நிறைவேறாத
குறிக்கோளுக்காகவே
நீ கொதிக்கும் வெயிலிலே
நிற்க்கிறாய்.

வெள்ளை மாளிகையின்
குளிர் அறையிலே
இரவல்
எண்ணை வயலுக்காகவே
நீ பாலைவனத்திலே எரிகிறாய்

உனது தேசக் கொடி
பறப்பது
அப்பாவிகளின் மண்டை ஓடுகளிலே
என்பது கூட
அறியாமலே
மரண பயத்தோடு
உனது வாழ்கை
கரைகிறது!

**மட்டுவில் ஞானக்குமாரன்**
(யேர்மனி)

## மரம் நாட்டுவோம் !

நேற்று வரை
பச்சையாகத் தான் இருந்தது
இந்த நஞ்சை

விஞ்ஞானம்
எனும் பெயரிலே
விதைத்தான் மனிதன்
இங்கேயும் நஞ்சை

அழிந்து போனது மரம்
பிளந்து போனது
நிலம்
ஒரு துளி நீருக்காகவே
திரிகிறோம் பானைகளோடு
உலக வலம் !

புமிக்கு குடைபிடித்த
மரங்களைத் தறித்தாய்
இப்போ
நீயே ஆகினாய்
பூமிக்கு குடை
மனிதனே
உன்னாலேயே ஒவ்வொரு நிலமும்
நாசமாகிப் போனது

வீசிய குண்டுகளாலேயே
ஒவ்வெரு நாடும்
நாகசாகி ஆனது ...

வா
நாம் நடக்கும் ஒவ்வொரு
அடியிலும்
ஒரு மரத்தை நாட்டுவோம்
பதிலுக்கு
உனது காலுக்கு கீழே
நிலம்
நீரைக்காட்டும் !

**மட்டுவில் ஞானக்குமாரன்**
(யேர்மனி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைதனைச் சாடு..! வெல்லு..!–கூடவே
# அன்பு பாதையை நீயும் போடு..!

நாடும் அழிகிறது
நம்மினமும் அழிகிறது..!
பாடுபட்டு நாம் வளர்த்த..
பரம்பரையும் அழிகிறது..!
எதிரியின் எண்ணத்தில் ஒரு
ஏற்றமும் தெரிகிறது-அதனால் தமிழா..!
பகைதனைச் சாடு..! வெல்லு..! கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு..!

நம்முன்னோர் சரித்திரங்கள்-இன்று
நம்முன்னே பாடங்கள்.
வேற்றுமையில் தொடர்ந்து விட்ட
எத்தனையோ வேதனைகள்.
எண்திசையும் திரும்பிப்பார்..!
ஏற்ற பதில் அதுகூறுஅதனால் தமிழா..!
பகைதனைச் சாடு வெல்லு- கூடவே
அன்புப் பாதையை நீயும் பொடு.!

களத்தினில் நிற்போரல்ல-தமிழிச்சி
கருவினில் இருப்போர் தானும்.
எதிரியை வென்று நமக்கோர் தேசம்
எடுக்கவே எண்ணம் கொண்டார்..!
மக்கள் சக்தியை ஆயுதமாய் மதித்து
களத்தினை நீயும் நோக்கி..! தமிழர்..!
பகைதனை சாடு வெல்லு. கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு..!

வேற்றுமை தன்னில் ஒரு
ஒன்றுமை நீயும் தேடு
சாற்றிடு பகை முழங்கு..!
மாற்றிடுன் போர் வியூகம்
தேற்றிடு தமிழர் நெஞ்சை-பகையை
தேடியே அழிக்கும் படையாய் ..தமிழக
தமிழர்.! ஓடியே வந்து நிற்பர்..! அதனால்
பகைதனைச் சாடு..! வெல்லு..! கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு..!

தற்கொடை தமிழராக உலகமுழு
தமிழரும் மாற வேண்டடும்.
எரித்திடும் நெருப்பாய் மாறி-தமிழன்
எதிரியை எரிக்க வேண்டும் .அதனால்
பகைதனைச் சாடு..! வெல்லு..! கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு

**வேலணையூர் பொன்னண்ணா**
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்.....

- நிலாக் காலம்
- இரவு பத்து மணி.

பூரண நிலவு பட்டப்பகலாய் காய்கின்றது. காட்டுப் பாதையில் வேகமும் நடையுமாக வேர்க்க விறுவிறுக்க மணிவேல் வந்துக் கொண்டிருந்தான். இரவின் குளிர்ந்த காற்று வியர்த்த அவன் உடலைத் தென்றலாகத் தழுவிய சுகத்தில் விரைந்தான். படிக்கட்டுக்கள், பள்ளம், மேடுகள், பளிச்சென்று தெரிந்தன.

தேயிலைக்காடு... நிரைக்கு நிரை நிழல் கொடுக்கும் முருங்கை, சவுக்கு, வாகை, கிளிசிறியா மரங்கள் நிலா வெளிச்சத்தில் மனிதர்கள் நிற்பது போல் தோன்றின. தேயிலைத் தளிர்கள் நிலாவொளியில் மின்னின.

காட்டு முயல்கள் மணிவேலை வேட்டைக் காரனாகக் கண்டு ஓடுகின்றன. ஏகாந்த இரவினில் ஓடை நீர் வெள்ளிவார்ப்பாய் சங்கீதம் இசைத்தது.

தூரத்தில் லயம் தெரிந்தது.

வேலிச்செடிகள் மண்டிக் கிடந்தன. அந்தி மந்தாரை கமகமத்தது. பூவாசமுள்ள செடிகளுக்குள்ளேதான் நாகமும் நல்ல பாம்பும் குடியிருக்குமாம். மணிவேலுக்கு "ஓடுகிற பாம்பை மிதிக்கிற வயசு!" இன்னும் வேகமாக அவன் நடந்தான்.

அவனது வேகமும் ஆவேசமும் வீட்டு வாசலில் போய் நின்றது.

வாசல் பைப்பைத் திறந்தான் மணிவேல். உச்சி மலையிலிருந்து வரும் "காட்டுத் தண்ணி" ... காற்றோடு கலந்து குபீரென்று பீறிட்டது. நல்ல ஒரு "பொடி வோஷ்" போட்டுக் கொண்டு இஸ்தோப்பு அறைக்கதவைத் திறந்தான்.

காய்ந்த விறகு... புகையில்லாத அடுப்பு... இஸ்டோர் அடுப்பாய் ஜெக ஜோதியாக எரிந்து கொண்டிருந்தது... சரஸ்வதி அகப்பையில் குழம்பைக் கலக்கி ... உள்ளங்கையில் ஊற்றி சப்புக்கொட்டி நக்கிச் சுவை பார்த்தாள்.

"கறி மணக்குது! சோத்தப் போடு!" என்று நுழைந்துக் கொண்டே அடுப்பங்கரை பலாக்கட்டையில் உட்கார்ந்தான். சரஸ்வதி சுடு சோற்றை ஆவி பறக்கக் கும்பாவில் போட்டாள். அந்தத் தோட்டத்தில் மணிவேல் வீட்டில் மட்டுந்தான் அந்த "வெண்கலக் கும்பா" இருக்கிறது... மற்றவர்களெல்லாம் 72, 73 பஞ்சக்காலத்தில் விற்றுத் தின்றுவிட்டார்கள். அந்தப் பண்பாட்டுச் சின்னங்களெல்லாம் இன்று தோட்ட நிர்வாகிகளின் பங்களாவில் அலங்காரப் பொருட்களாகவும் புராதனப் பொருட்கள் சேர்க்கும் கடைகளில் விலைப் பொருட்களாகவும் "புலம் பெயர்ந்து" விட்டன! சோற்றுக் கும்பாவை கையால் சுண்டினால் ஏழு ஸ்வரங்களையும் எழுப்பலாம்!
அந்த ஸ்வரங்களோடு வாழ்ந்த வாழ்க்கை எங்கே? இன்று றப்பர் கோப்பை! அடிக்கடி நாய்கள் தூக்கிக் கொண்டு ஓடி விடும்!

சரஸ்வதி சவுசவுக்காவோடு மாசிக்கருவாடு போட்டு உறைப்பாகச் சமைத்திருந்தாள். வாதப் பிடிப்புக்காக வெள்ளைப்பூடும் நிறையச் சேர்ந்திருந்தாள். சவுசவுக்காய் கறி வைப்பதிலும் புளிச்சக்கீரை சேர்த்துச் சேமங்கீரை கடைவதிலும் சரஸ்வதிக்கு நிகர் சரஸ்வதிதான்! சமையலும் கல்விதானே!

"சுப்பர் டேஸ்ட்டு !" சோற்றை கும்பாவில் பிரட்டி உருட்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் மணிவேல். சரஸ்வதி அவன் ருசித்துச் சாப்பிடும் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள். கும்பாவில் ஒட்டியிருக்கும் கரிச்சாந்துகளை விரலால் வழித்து வாய்க்குள் விரலைச் சூப்பும் "பட்டிக்காட்டு டெக்னிக்கில்" அவன் ஒன்றியிருந்தான்.

சடாரென்று வெட்கித் திரும்பியவள்... "எரும மாடு ! பலவாக்கட்டையில ஒழுங்கா ஒக்காரத் தெரியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டிக் கட்ட தெரியாட்டி... கோவணத்தையாவது கட்டிக்கணும்!" என்றாள்.

"அடிப்போடீ! அங்க யாரு ஒன்னையப் பாக்கச் சொன்னது? வேலக்காரன் சரக்கு வெளியே கெடந்தா என்னா உள்ளே கெடந்தா என்னா...?" என்றான் அவனும்.

இருவரும் கெக்களி கொட்டிச் சிரித்தனர். ஏழ்மையிலும் ஒன்று கலந்த வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் கொட்டிக் கிடக்கிறது! இந்த பாமர இன்பத்தை பணத்தாலும் பொருளாலும் அனுபவிக்க முடியுமா?

மணிவேல் சாப்பிட்ட உடனேயே பனிய லயத்துக்குப் போகத் தயாரானான்... பனிய லயத்தில் தான் மற்றத் தலைவர்களையெல்லாம் சந்திக்க வேண்டும்.

"ஸ்ட்ரைக் இன்னும் எத்தனை நாளைக்கு நடக்கும் ?" சரஸ்வதி ஏக்கத்தோடு கேட்டாள். "எல்லாரும் ஊக்கம் குடுத்தா இன்னும் ஒரு மாசத்துக்கு தொடரலாம்!"

முழுக்கை சட்டையை மாட்டி... கையை சுருட்டிக் கொண்டே அவன் பேசினான். "எல்லாரு மேலேயும் நம்பிக்க... இருக்கு ... ஆனா... பெரியத்தலவரு பயல்கள் மேலத்தான் சந்தேகம்... நெருப்பெட்டிய குடு !" அவன் பீடியைப் பற்றவைத்துக்கொண்டு... "கதவ முட்டுப் போட்டுக்க... யாரும் தட்டினா தொறக்காத! பன்னெண்டு மணிக்கு முன்ன வந்திருவேன் !" என்று மீண்டும் ஓட்டமும் நடையுமானான் மணிவேல்.

□□□□□

அந்தக் காலத்தில் வேலைநிறுத்தம் என்றால் தொழிலாளர்கள் அயல் தோட்டங்களுக்கு அரிசி சாக்கோடு போய் "சுண்டு அரிசி" சேகரிப்பார்கள். சக தொழிலாளர்கள் அரிசி மாவு சில்லறை காசுகள் கொடுத்து போராட்டத்தை ஊக்கப் படுத்துவார்கள்.

வேலை நிறுத்தம் -

சம்பள உயர்வுக்கான போராட்டத்தோடு அடிப்படை உரிமைக் கோரிக்கைகளையும் முன்வைத்து முழு பெருந்தோட்டங்களிலும் அறுவத்திரண்டாவது நாட்களாக வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் பரிதாப நிலைமை இருநூறு ஆண்டுகாலத்துக்குப் பின்னும் இந்த நாட்டில் இன்னும் தொடர்கின்றது.

வறுமையில் வாடும் தொழிலாளர்கள் இத்தனை நாட்கள் எப்படி வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்துகிறார்கள் என்று நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றது... உள்ர் தமிழ் பத்திரிகைகளும் வானொலிகளும் தொழிலாளர்களின் சம்பளப் போராட்டம் வெற்றி பெற ஊக்கம் வழங்கி பிரச்சாரம் செய்தன. இனவாத ஏடுகள் எதிராகக் குரல் எழுப்பின. இந்த எழுச்சியை இருட்டடிப்பு செய்தன. இந்தப் போராட்டம் தேசிய பொருளாதாரத்தினை சீர்குலைக்கும் போராட்டம் என்று கொக்கரித்தன.
இந்தச் சக்திகளின் பின்னால் பெருந்தோட்ட கம்பனிகளும் அரசும் அரசுக்கு கடன் வழங்கிய உலக வங்கியும் பின்னணியில் நின்றன.

தோட்டத் தலைவர்கள் தொழிற்சங்கங்களிடம் மாவு மூட்டை, அரிசி மூட்டை கேட்டார்கள். சில சங்கங்கள் தறிகெட்டுத் தடுமாறின. சில தொழிற்சங்கங்கள் முக்கி முனகிக்கொண்டு கண்ட இடங்களில் எல்லாம் கையேந்தி பிச்சைக்கேட்டன.
தொழிலாளி வேலை நிறுத்தக் காலங்களில் இப்படி உதவி கேட்க வருவார்கள் என்றுதான் வேலை நிறுத்த நடவடிக்கைகளை நிர்வாகத்துக்கு எதிராக தொழிற்சங்கங்கள் நடத்த விரும்புவதில்லை...!

தொழிலாளர்கள் தமது உரிமைப் போராட்டத்துக்காக குறைந்தது முப்பது நாட்கள் வேலை நிறுத்தம் செய்யும் போதுகூட தொழிற்சங்கங்கள் அவர்களுக்குப் பொருளாதார உதவி செய்வதில் தங்களது கையாலாகாத்தனத்தை காட்டி நிற்பர். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்கு இன்று வரை கோடிக்கணக்கில் சந்தாப்பணம் வழங்கியும் அவைகளுக்கு கணக்குக் கேட்டதாகவோ வரலாறும் கிடையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமானால், அல்லது அவர்கள் உற்பத்தியை பாதிப்படையச் செய்ய வேண்டுமானால் குறைந்தது ஆறு மாதங்களாவது வேலை நிறுத்தம் செய்ய வேண்டும். அந்த நடைமுறையே தோட்ட விவசாயத் தொழில் முறையைப் பாதிப்படையச் செய்யமுடியும்.

வறுமையை மடியில் கட்டிக்கொண்டு தொழிலாளர்களுக்குப் பத்து நாட்கள் கூட வேலை நிறுத்தம் செய்ய முடியாத நிலை தான் இங்கு நிலவுகிறது.

இந்தப் பலவீனத்தை அறிந்து கொண்ட அரசும் கம்பெனிகளும் தொழிலாளருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் எப்போதும் பயப்படுவதில்லை. அவர்களது போராட்டங்களை மதிப்பதில்லை. பதிலாக பேச்சு வார்த்தை மேசையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவமதித்து அனுப்புவதே அவர்களது வரலாறாகவும் அந்த அவமானத்தை மொத்தமாக வாங்கிக் கொண்டு வருவது தொழிற்சங்கங்களின் வரலாறாகவும் இருந்து வருகின்றன!. பேச்சு வார்த்தை மேசைகளுக்கு செல்லும் போது தொழிற்சங்கவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நியாயப்படுத்துவதற்கான அறிவோடும் திராணியோடும் புள்ளி விபரங்களோடும் முதலாளிமார்களுடைய பிரதிநிதிகளின் தகுதிக்கு சமமாக நின்று பிடிக்க முடிவதில்லை.

தரமும் தகுதியற்ற தலைமையும் வழிநடத்தும் பாதையிலேயே தொடர்ந்து தொழிலாளர்கள் இடறி விழுந்துக் கொண்டே பயணம் செய்கின்றனர்

- அந்த தோட்டத்தில்...

வேலை நிறுத்தத்தை நடத்தும் தலைவர்மார் எல்லோரும் துரைசாமியின் வீட்டில் கூடினார்கள். ஏழு டிவிசன் தலைவர்மார்களும் வந்திருந்தார்கள். பக்கத்து தோட்டங்களில் அரிசி, மா சேகரித்த விபரங்களை ஒவ்வொரு டிவிசன் தலைவரும் கூறினார்கள்.

"இன்னும் ஒரு மாசத்துக்கு அரிசி மாவு போதும்... நெறைய ஆதரவு நமக்கு கெடைக்குது..." பதுள்ள, பண்டாரவள... ரத்தினபுரி.., காலி... எல்லா ஏரியாவும் நல்லா இருக்குது..."

வேலை நிறுத்தத்தை தலைமை தாங்கி நடத்தும் தலைவர்மார்களுக்கு நம்பிக்கையும் ஊக்கமும் மகிழ்ச்சியும் ஒன்றாக கலந்து உரமேறின.

அந்தச் சந்திப்பில் ஒவ்வொரு தலைவரும் தமது கருத்துக்களை கூறினார்கள். "அறுபத்திரண்டாவது நாளை நெருங்கியும் கம்பெனி காரனுங்க திமிரோடு நிக்கிறானுங்க... அரசாங்கமும் கம்பெனி காரனுங்க பக்கமே நிக்குது..."

"இந்த ரெண்டு பேருக்கும் உலக வங்கிதானே உபதேசம் செய்யுது?" "மத்த நாடுகள்ல அரசியல்வாதிகளை விட தொழிற்சங்கவாதிகளுக்கே அரசாங்கம் பயப்படுது தொழிற்சங்கவாதி நெனைச்சா பொருளாதாரத்த மொடமாக்கி நாட்ட குப்புறப்போட்டிடலாம் ஆனா நம்ம நாட்டுல அரசியல்வாதி தான் தொழிற்சங்கவாதி இங்கே இவன் தான் அரசாங்கத்துக்கு பயப்படுறான்"

"ஆமா!" "ஆமா நம்ம பெரிய தலைவர் மாருங்க கடைசி நேரத்துல கால வாரி விடுவாங்க...!

"ஆமா...! நம்மள சமாதானப் படுத்த வருவாங்க... யாரும் அந்த சந்தர்ப்பத்துல சளைக்கக் கூடாது..." என்றார் ஒரு தலைவர்.

"வட் இஸ் த ஹெல் ஐசே...! யு ஆர் எ மினிஸ்டர் இன் மை கவர்மென்ட்...! நீயே ஸ்ட்ரைக் ஓகனைஸ் பண்ணலாமா...? "

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உண்டாக்கிற வரைக்கும் ஆளுங்கட்சி மந்திரிகள் விசுவாசமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கக் கூடாதா...?

ஹலோ... ஹலோ... கேன் யு ஹியர் மீ...? மைன்ட் யு நெக்ஸ்ட் கவமென்ட் ஓல்சோ மைன்...! அடுத்த சான்ஸிலும் மந்திரியாவதை காப்பத்திக்கோ..." என்று டெலிபோனை டேஸ் பண்ணினார் பிரதம மந்திரி.
பெரிய தலைவர் பயந்தார்... எதிர்க்கட்சிகாரனுங்களும் அரசாங்கத்தோட சேர்ர மாதிரி பேச்சு வார்த்தை இருக்கு... தலைவர் வாயிக்குள்ளே பேசிக்கொண்டார்... "எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது..." கீதாசாரம் தலைவரை பயமுறுத்தியது...!

பெரிய தலைவர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவர் கூட்டத்தை கொழும்பில் ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் பகல் சாப்பாட்டுடன் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

வாகனச்செலவுடன் கைச்செலவுக்கும் பணம் தரப்படும் என்ற பணிப்புரையும் தலைவர் மார்களைச் சென்றடைந்தது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தோட்டத் தலைவர்மார்கள் மனம் குழம்பினார்கள்.

வேலை நிறுத்தத்தை கைவிடும்படி பெரிய தலைவர் சொல்வாரோ...? சிலர் ஏக்கத்தோடு வினவினார்கள்.

"இப்படித்தான் ஒவ்வொரு தடவையும் நடக்கும்...!" ஒரு இளந் தலைவன் பற்களை நறநறவெனக் கடித்தான்.

"ஆமா...! கம்பெனிக்காரன் இவன்களுக்கு கட்டமொய்யி போட்டான்னா... கத ... காலிதான்" என்று இன்னொரு இளைஞன் சத்தமாகச் சொன்னான்.

"ஏண்டா கெட்டப்பக்கமே யோசிக்கிறீங்க...! கொழும்புக்கு மொதல்ல பத்துத் தோட்டத்து தலவர் மாருகள அனுப்புவோம்... பெரிய தலவரு என்னா சொல்லி அனுப்புறார்னு பாப்போம்..." என்று பொறுமையாக சொன்னான் மணிவேல்.

□□□□□

மறுநாள் விடிந்தது -
மாவட்டப் பிரதிநிதி அந்த டவுனில் நின்ற டொல்பின், கரவன், டவுனேஸ், லைட்டேஸ் எல்லாவற்றையும் கொண்டு வந்து யூனியன் காரியாலயத்துக்கு முன் "அடித்திருந்தார்".

பத்துத் தோட்டத்தை விட அதிகமான தலைவர்கள் கொழும்புக்கு சென்றார்கள்.

□□□□

கொழும்பு ஓட்டல் -

கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த வசந்த மாளிகை முன்னால் வாகனங்கள் வந்து நின்றன.

அமைச்சு ஊழியர்கள் தலைவர் மார்களை மூன்றாவது மாடிக்கு லிப்டில் ஏற்றிச்சென்றார்கள். அமைச்சர் வர கொஞ்சம் சொணங்குமாம்... எல்லாரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க" என்று கூட வந்த பிரதிநிதி கூறிவிட்டு பிஸியாக விரைந்தார்.
தலைவர் மார்கள் அந்த நீலக் கடலை கண்கள் பாயும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தில் ஒரு கப்பல்... அதோ அங்கொரு கப்பல்... இன்னும் தூரத்தில் ... ஆகத் தூரத்தில்.... அடிவானத்தில்... தலைவர்கள் வியந்து போனார்கள். "அதுக்கு அங்குட்டுத்தான் இந்தியா இருக்குமோ?" என்று ஒரு தலைவர் கேட்டார்.

பிரதிநிதி வந்தார்.
தலைவர்மார்களை அருகில் அழைத்து குசுகுசுத்தார். அவர்கள் புன்னகை செய்தார்கள். இன்னொரு அறைக்கு தலைவர்களை அழைத்துச் சென்றார் பிரதிநிதி...

சொர்க்க லோகத்தில் வாசஞ்செய்வதாக தலைவர்மார்கள் நினைத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதி காட்டிய மேசையில் உட்கார்ந்தார்கள். வித விதமான வடிவங்களில் குடிவகை போத்தல்களை ஒரு ட்ரொலியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வந்தான் கோமாளி உடையில் ஒரு வெயிட்டர்...

"வந்த விசயம் பத்தி தலவருகிட்ட நெறைய பேசணும் "கொஞ்சத்தை எடுத்திட்டு" சாப்பிடுவோம் " என்றார் பிரதிநிதி...

"மீதிய கையில புடிச்சிக்கிட்டு போனா போச்சு...!" என்று ஒரு தலைவர் ஜோக் விட்டார்.

வந்தவர்கள் பதமானார்கள்.

அதோ...! தலைவராகிய அமைச்சரும் வந்து விட்டார்.

கரங்களை உயர்த்தி வணக்கம் கூறினார். "மன்னிக்கணும்... சொணங்கிப் போச்சி... வாங்க சாப்பிடுவோம்..." என்று தலைவர் "பு∴வே லன்ஞ்" சுக்கு கூட்டிச் சென்றார். வித விதமான உணவு வகைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

"விரும்பியதை வேண்டிய மாதிரி போட்டுச் சாப்பிடலாம். வெக்கப்பட வேண்டிய அவசியமே இல்லை". என்றார் தலைவர் புன்னகையோடு.

பகல் போசனம் முடிந்தது.

தலைவர் கதையைத் தொடங்கினார்.

"எல்லா எடத்திலேயும் இப்போ ஆமியைப் போட்டுத்தான் அரசாங்கம் வேல வாங்குது... ஆஸ்பத்திரி ஸ்ட்ரைக்க பாத்தீங்களா... என்னாச்சு...?" என்றார். "நமக்கு தாக்கு பிடிக்க முடியுமா...?"

ஒரு தலைவர் எடுத்த எடுப்பிலேயே பதில் சொன்னார். "தலவரு சொல்ற மாதிரி செய்றோம்" என்றார். வந்தவர்கள் எல்லாரும் ஆடுகளைப்போல் தலைகளை ஆட்டினார்கள்.
ஆமாம். தலைவர் வாக்கு அவர்களுக்கு "வேத வாக்கு !"

பெரிய தலைவர் அத்தோடு நிற்கவில்லை. "கம்பெனிகாரனும் சொன்னான். தலைவர் மார்கள் எல்லாருக்கும் கங்கானி வேல... காவல் வேல... கொந்தராத்து வேல... ரகசியமா கைமாத்துக் கடன்... கூரைத்தகரம்... சிமிந்தி... கோயில் சீரமைப்பு... படித்த பிள்ளைகளுக்கு தோட்டத்துக்குள்ளேயே "ஜொப்பு" எல்லா சலுகைகளும் கெடைக்கும்" என்றார். அவர் மேலும் தொடர்ந்தார்... யோசிச்சி ஒரு முடிவா சொல்லுங்க... ராத்திரிக்கு டி.வி.யில நான் வந்து மக்களுக்கு சொல்லணும் என்றார்.

இந்தத் தடவை ஸ்ட்ரைக்க வுட்டுப் புடிப்போம்! நாட்டுல யுத்தம் கூடாது சமாதானம் தொடரனும்... நாம்ம அரசாங்கத்தோட இருக்கோம்... இன்னும் வாங்க வேண்டியது எவ்வளவோ இருக்கு... எதிர்க்கட்சிக்காரன் மாதிரி நாங்க போயி அரசாங்கத்த எதிர்க்க முடியாது. இருந்தா ஒன்னா இருக்கணும்... இல்லாட்டி வெளிய வரணும்... ரோட்டுக்கு வந்துட்டா மட்டும் என்னத்த செய்ய முடியும் ? இப்ப சரி... ஒரு பொலிஸ் கேஸ"க்கு ஓ.ஐ.சி. கூட நம்ம டெலிபோன் கோலுக்கு பயப்படுறான்... அப்புறம் ரோட்டுக்கு வந்திட்டா நாயி கூட மதிக்காது!

"பிரதமரும் எனக்கிட்டே வாக்குறுதி குடுத்தாரு... நம்ம கோரிக்கை எல்லாத்தையும் கவனமா படிச்சாரு... எல்லா விசயத்தையும் வெளக்கமா சொன்னேன்... பாதிக்கு பாதியாவது சரிவரும்... வேல நிறுத்தத்த தற்காலிகமா நிப்பாட்டி வைப்போம்..." என்றார்.

"யோசிக்கிறதுக்கு ஒன்னுமில்லேங்க..."

"சேர் சொல்லுறப்படி செய்யுறோம்... நீங்க டிவியில... வந்து மொகத்த காட்டினா போதும்..." என்றார்கள்.
பிரதிநிதி ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு "என்வலெப்" கொடுத்தார். அதனுள்ளே கை செலவுக்கு ஒத்தை நோட்டு ஐநூறு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்னரை வணங்கி சிற்றரசர்கள் கிளம்பியது போல் தலைவரை வணங்கி தோட்டத்தலைவர்கள் "லிப்டுக்குள்" நுழைந்தார்கள்.
லிப்ட் கீழே இறங்கியது.

□□□□□

கெரவன்... டொல்பின் எல்லாம் கொழும்பை விட்டு அகன்றன...

இரவு தொலைக்காட்சி செய்தி... பெருந்தோட்டங்களை அசைத்தது...
விஷேச செய்தியில் -

தலைவராகிய அமைச்சர் அறிவித்தல் கொடுத்தார்.

"பிரதமரோடு பேச்சுவார்த்தை நடந்தது. கோரிக்கைகளை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டார். வெளிநாடு போய் வந்ததும்... கோரிக்கைகள் நிறைவேறும். தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும் படி கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

அவர் செய்தியும் முடிந்திட... கொழும்பு சென்ற தலைவர்மார்கள் மணிவேல் தலைவரின் வீட்டுக் கதவைத்தட்டினார்கள்.

எல்லாம் சரி... நாளைக்கு வேலைக்கு போகணும்... என்றார்கள்.

தூக்கம் கெட்டு கண் விழித்து சுலோகங்கள் எழுதிக் கொண்டிருந்த இளைஞர்கள் மூச்சடைத்து நின்றார்கள்.

அவர்கள் எழுதிமுடித்த சுலோகங்கள் தரையில் கிடந்தபடி அவர்களைப் பார்த்து துடித்தன!

"உழைப்புக்கேற்ற சம்பள உயர்வு கொடு !"

"வீடு கட்டுவதற்கு நிலம் கொடு !"

"தோட்டப் பிரதேசங்களில் தொழிற்பேட்டைகளைத் திற !"

"புதிய பரம்பரையினருக்கு புதிய தொழிலைக் கொடு !"

"தரிசு நிலங்களை சுயதொழிலுக்காக வழங்கு !"

" தோட்டத் தொழிலேயே எங்களை அடைத்து வைக்காதே !"
இன்னும் பல.... இளைஞர்களின் இருதயத்துக்குள்ளே இருந்து வெளியே வந்த குமுறல் வார்த்தைகள் எல்லாம் குற்றுயிராகக் கிடந்தன.

மணிவேல் மௌனமாக நின்றான். அவன் மனம் கொதித்தது.
காலம் முழுவதும் இதே கதைதான்...

அந்தப் பஞ்சத் தந்திரக் கதையில்... பன்றி ... கன்றுகளுக்கு கற்றுக் கொடுத்தது...
இங்கே எருமை மாடுகளுக்கும்.......!!

"இவைகளை என்ன செய்வது ?"

"எவைகளில் இருந்து எவைகளைப் பிரித்து வைப்பது?"
"அவன் ஆவேசமாக விடை தேடிக்கொண்டிருந்தான்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாட்டில் வீரன்



இலங்கையில் ஒரு மிகச் சிறிய கிராமத்தில் வீரன் என்னும் பெயருடைய நாய் வாழ்ந்து வந்தது. அந்த நாய்க்கு உரிமையாளவர்கள் எவரும் இல்லை. அக்கிராமத்தில் இருந்து முதியவா் ஒருவர்தான் அந்நாய்க்கு வீரன் எனப் பெயர் சூட்டியிருந்தார். வீரனின் தோற்றமும், செயற்பாடும் மற்றைய நாய்களைவ-ிடச்சற்று வேறுபட்டதாகவே அமைந்தது. மற்றைய நாய்களைத் தெருவில் காணும் பொழுது சிலருக்குப்பயம் ஏற்படும், ஆனால் வீரனைப் பார்க்கும் பொழுது எவருக்கும் பயம் வருவதில்லை.

வீரன் தன் பெயருக்கு ஏற்றாற்போல் இரவு நேரங்களில் அக்கிராமத்தை காவல் புரிந்து வந்தது. வீரன் அக்கிராமத்தில் வந்து வசிக்கத் தொடங்கிய பின் அக்கிராமவாசிகள் பயம் இன்றி இராப் பொழுதில் நிம்மதியாக உறங்கினர். வேறு சில நாய்களும் வீரானுடன் சேர்ந்து அக்கிராமத்தை காவல் புரிந்து வந்தன. நல்லவர்களை இனங்கண்டு அவர்களுடன் நட்புக் கொள்ள வேண்டும் என்று கூறுவது இங்கு பொருத்தமாக அமைகிறது. வீரனுடன் சேர்ந்தபடியால் இவர்களும் வீரனின் நற்பண்புகளைக்கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். அக்கிராம மக்களும் கிராமத்தை காவல்புரியும் நாய்களுக்கு நல்ல உணவு கொடுத்து வளர்த்தார்கள்.

ஒரு நாள் ஒரு முதியவர் வழியில் வந்து கொண்டிருக்கும் பொழுது மயக்கம் வந்து பாதை ஓரமாக விழுந்துவிட்டார். அவர் விழும் பொழுது தலையில் கல் அடிபட்டு இரத்தம் கசியத்தொடங்கியது. இதனை அவ்வழியால் தன் நண்பர்களுடன் வந்துகொண்டிருந்த வீரன் கவனித்துவிட்டான். உடனே அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் ஓடிச்சென்று பாதையில் சென்றவர்களைப் பார்த்துக் குரைத்து முதியவரைக் காப்பாற்றுவதற்கு அவர்களை அழைத்துச்செல்ல முயற்சி செய்தான். பாதையில் நின்றவர்களைப்பார்த்துக் குரைப்பதும் பின்பு முதியவர் இருக்கும் இடத்தை நோக்கி ஓடுவதும், மீண்டும் வந்து குரைப்பதுமாகச் செயல்பட்டான். இதைக் கவனித்தவர்கள் ஏதோ நடந்துவிட்டது அதுதான் வீரன் இப்படிக் குரைக்கின்றான், எதற்குத் வீரனுடன் சென்று பார்ப்போம் என்று அவன் பின்னால் சென்றார்கள். வீரன் அவர்களை அந்த முதியவர் விழுந்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றது. வீரனின் நண்பர்கள் அப்பெரியவரை நாவால் நக்கி தங்கள் அன்பை வெளிக்காட்டினார்கள். அவ்விடத்திற்கு வந்த மக்கள் பெரியவரை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று அவரைக் காப்பாற்றினார்கள். வீரனின் இச்செயல் மக்களுக்கு அவன் மீது மேலும் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. அக்கிராம மக்கள் வீரனும், அவனது நண்பர்களும் வசிப்பதற்கு ஒரு நல்ல பெரிய கூட்டை அமைத்துக் கொடுத்தனர்.

இலங்கையில் நடந்த கடல் கொந்தளிப்பால் பல மிருகங்களும் இடம் பெயர்ந்து சென்றன. சில நாய்களும் பூணைகளும் வீரன் இருந்த கிராமத்திற்கு வந்தன. அவை பல நாட்கள் சாப்பாடு இல்லாததால் நடக்கமுடியாமல் சோர்ந்து போய் வீரனின் கூட்டுக்கு பக்கத்தில் படுத்திருந்தன. இதனைக் கண்ட வீரன் அவர்களைத் தன் கூட்டுக்கு அழைத்துச் சென்று உணவு கொடுத்து அன்பாக உபசரித்தான். அவர்கள் மனம் மகிழ்ந்து வீரனை முத்தமிட்டு தங்கள் நன்றியை வெளிக்காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் திடீரென வீரனுக்கு சுகயீனம் ஏற்பட்டது. வெளியில் செல்ல முடியாமல் கூட்டுக்குள் அனுங்கிக் கொண்டு படுத்திருந்தான். அச்சமயம் அமெரிக்காவில் இருந்து வந்திருந்த மிருகவைத்தியர் ஒருவர் அவ்வழியால் சென்று கொண்டிருந்தார். அவருக்கு வீரனின் அழுகைக் குரல் கேட்டது. உடனே அங்கு சென்று வீரனைப் பரிசோதித்து வைத்தியம் பார்த்தார். வீரனும் அன்பால் அவரை நாவால் நக்கினான். அவருக்கு வீரன் மீது பாசம் உண்டானது. வீரனை தன் கரங்களால் தூக்கி அன்பாகத் தடவியவண்ணம் அந்த ஊர் மக்களை நோக்கி வீரனின் உரிமையாளர் யார் என விசாரித்தார். "வீரனுக்கு சொந்தக்காரர் எனக் கூறுவதற்கு ஒருவரும் இல்லை.

வீரன் சிறுகுட்டியாக இக்கிராமத்திற்கு வந்தான். எங்கள் எல்லோருக்கும் வீரனில் நல்ல விருப்பம். நாங்கள் தான் வீரன் என்ற பெயரை வைத்து அழைக்கின்றோம். வீரன் இக்கிராமத்தைக் காவல் காப்பவன். நாங்கள் அனைவரும் அவனின் உரிமையாளர்கள்தான்" என்று எல்லோரும் சொன்னார்கள்.

அவ் வைத்தியர் வீரனை அமெரிக்காவுக்கு அழைத்துச்சென்று வளர்பதற்குப் பிரியப்படுவதாக கூறினார். எல்லோருக்கும் வீரனைப் பிரிவது கவலையாக இருந்தாலும் தங்களுக்கு இவ்வளவு காலமும் உதவி புரிந்த வீரன் இனிமேலாவது சுகமாக வாழட்டும் என்னும் நல்ல எண்ணத்தில் அனைவரும் சம்மதித்தனர். வீரனுக்கும் தன் மீது அன்பையும் பாசத்தையும் வைத்திருக்கும் வைத்தியருடன் செல்வதற்கு விருப்பமாக இருந்தது.

வீரனும் வைத்தியருடன் அமெரிக்கா சென்றான். அங்கே, நாய்கள் கூட சில நோயாளிகளின் நோயை குணமாக்குகின்றன எனக் கண்டறிந்த பின் பண்புள்ள நாய்களைப் பரிசோதித்த பின் நோயாளிகளுடன் மருத்துவர்கள் பழகவிட்டனர். வீரனுக்கு எல்லோரையும் கவரக்கூடிய தோற்றம் இருந்ததாலும், பொறுமையாகவும், அன்பாகவும் மற்றவர்களுடன் பழகும் சுபாவம் இருந்தமையாலும் வீரனை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கியபின் வீரனையும் நோயாளிகளுடன் பழகுவதற்கு சேர்த்துக்கொள்ள எண்ணினார். பல பரிசோதனைகளுக்குப் பின் வீரன் இச் சேவைக்கு தகுதியானவன் என்று தீர்மானிக்கப்பட்டு, நோயளிகளுடன் பழகுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

வீரனும் நோயாளிகளுடன் மிக அன்பாகப் பழகி சிறந்த முறையில் தன் கடமையைப் புரிந்தான். அவர்களும் வீரன் மீது அன்பு செலுத்தினார்கள். வீரன் பழகிய நோயாளிகளின் உடல் நலம் தேறிவருவதாக மருத்துவர்கள் கருதினார்கள். வீரன் தனது சுயநலமற்ற சிறந்த சேவையினால் எல்லோருடைய அன்னையும், மதிப்பையும் பெற்றதுடன், தன் தாய் நாடான ஈழத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்தது.
மழலைகளே நீங்களும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கை வளர்த்துக்கொண்டால், எல்லோரும் உங்களுடன் அன்பாக நடந்து கொள்வார்கள்.

நன்றி உள்ள மனிதனாக வாழ வேண்டுமே
நன்மை செய்யும் உள்ளத்தை வளர்க்க வேண்டுமே

எல்லா உயிரையும் அன்பாக மதிக்க வேண்டுமே
எல்லோருக்கும் உதவி செய்து மகிழ வேண்டுமே

தாய் மண்ணின் மானத்தைக் காக்க வேண்டுமே
தன்னலம் அற்ற வாழ்வை நாங்கள் வாழ வேண்டுமே

பிறருக்காக என்றும் நாங்கள் வாழ வேண்டுமே
பிறப்பெடுத்த பயனை நாமும் அடைய வேண்டுமே

இராஜ்கண்ணா
நோர்வே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை அரசின் உக்கிரம்
## மலர்ச்செல்வன் கவிதைகள்

வாழ்க்கையின் உத்தரவாதங்கள் தகர்ந்து போயிருக்கும் யதார்த்தவெளியில் தனித்தலையும் கவியின் மொழிதலாக மலர்ச்செல்வன் கவிதைகள் பெருகியிருக்கின்றன. அதிரும் மனமும் நொருங்கும் சூழலும் சிதறடித்த மொழியை கூட்டியள்ளி மலர்ச்செல்வன் தன் கவிதைகளை எழுதியிருக்கிறார்.

அவிந்த உணர்வின் சிதைகளில் மூட்டப்பட்ட பெருந்தீயாய் கொழுந்து விடுகின்றன அவரது தனித்துத் திரிதல் கவிதைகள். வாழவிரும்பிய கணங்கள் எதிர்நிலையில் விபரீதங்கொண்டு இயங்குவதை சகிக்க முடியாமல் தத்தளிக்கும் நிலை ஒரு புள்ளியில் உணரப்பட இன்னொரு புள்ளியில் சகிப்பை மீறிய கோபம் மலர்ச்செல்வனுக்குள் பொங்குகிறது. இது ஒரு நிலை. ஆனாலும் மலர்ச்செல்வனின் கவிதைகளில் துயரத்தின் நிழலே படிந்திருக்கிறது. துயரம் தான் மலர்ச்செல்வன் கவிதைகளின் மையம். துயரம் வனைகின்ற மொழியை தன்னொழுங்கில் அமைப்பதன் மூலம் கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என மூன்றின் மீதும் கேள்விகளை எழுப்புகிறார் மலர்ச்செல்வன்.

மனிதவாழ்க்கையில் இதுகாலவரையும் கண்டறியப்பட்ட உண்மைகள் என்ன? மனிதமனம் தொகுத்துக்கொண்டிருக்கும் அனுபவத்தின் நிலையென்ன? எது அதனைப் புறம்தள்ளுவது? வாழ்வின் மீது எது நிழல்விழுத்துவது? எப்போதும் ஒவ்வொருவிதமாக திரட்சிபெற்று மேலெழும் அரசியலா? அந்த அரச-யலின் வெவ்வேறு முகங்களா? உண்மையில் அரசியல் எப்போதும் ஏதோ ஒரு வகையில் அனுபவத்திற்கு எதிராகத்தான் இயங்குகின்றதா? அது அப்படி இயங்குகின்றபடியால் தானோ எப்போதும் அனுபவத்திற்கு முரணாகவும் அதைப்பொருட்படுத்தாமலும் அது வாழ்வைச் சிதைக்கும வாளைத் தன் உறையில் வைத்திருக்கிறது? அது வாழ முடியாத்துயரம் அறிவின் யுகமாகிய இன்று கூட தீராப்பழி பெருத்து வாழ்வைச் சிதைக்கிறது. எதெனனெதன் பேராலோவெல்லாம் ஏதோவொரு சம்பந்தமுமில்லாமல் பழிவாங்கப்படுகிறார்கள் சனங்கள். தீராத்துயரின் வலியின் குருதித்தெறிக்கைகள் தனித்திருத்தலின் கவிதைகளில் படிந்துள்ளன. இப்போது நிகழ்காலத்தில் சிதையும் வாழ்வு பற்றிய மனித்மனத்தின் மதிப்பீடென்ன? நிகழ்காலம் வரையான அறவியலும் அறிவியலும் வாழ்வின் மீது நிகழ்த்துவதென்ன? வாழ்வின் மீது துன்பத்தின் நிழல் விசமாகக் கவிகையில் இந்த அறவியலும் அறிவியலும் என்னவாக-ின்றன?

உண்மையில் அதிகாரத்திற்கிடையிலான போட்டியும் அது பெருக்கும் நுட்பங்களும் கண்டறிந்த எல்லா அறிவியலையும் அறவியலையும் துவம்சமாக்கி விடுகின்றன. அறிவியலும் அறவிலும் துவம்சமாகும் போது வாழ்க்கை சிதைகிறது. இங்கே துன்பத்தின் ஊற்று பெருக்கெடுத்து வாழ்வை மூழ்கடிக்கிறது. இதுவே தொடரும் யதார்த்தம். இதற்கெதிராக தொடர்ந்தும் இன்னொரு முனையில் மனிதமனம் இயங்குகிறது. அது அதிகாரத்திற்கு எதிரானது. ஆனால் அதே வேளையில் அது அதிகாரத்தைப் பகிரக் கோருகிறது. அதிகாரத்தைப் பகிர்வதற்கான மனப்பாங்கு, இணக்கம் தயார் என்பன இல்லாத போது அதைப்பகிர்வதற்கான வன்முறை வெடிக்கிறது. இந்த வன்முறையின் எல்லையை அது வெடித்த பின் யாராலும் நிர்ணயம் செய்யமுடியாது. அது கட்டற்றது. அது எல்லாப்பருவங்களையும் ஊடுருவி எல்லா திசைகளையும் சிதைத்து விடுவது. இங்கேயும் வாழ்வின் மீது துன்பத்தின் நிழல் கருந்திரையாகப்படர்கிறது. எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை தன் வழியே துளிர்கிறது. எல்லாக் காலத்தையும் சிதைக்கும் அதிகாரத்தின் முன் அறமும் தோற்கிறது. அறிவியலும் தோற்கிறது. அப்படிய-ாயின் உலகம் இதுவரையிலும் தன்னறிவிலும் தன்னனுபவத்திலும் கண்டதென்ன? அதிகாரத்துக்கான போட்டியென்பது அறிவுக்கும் அறிவின்னைக்குமான போட்டியா? கடவுளே இதன் முடிவெது? இதற்கு முடிவேயில்லையா?

ஒரு அதிகாரத்திற்கு எதிரான மாற்று அதிகாரமென்பது இன்னொரு அதிகாரமாக மாறிவிடும் விந்தை இன்னும் மாறாமல் இருக்கிறதே. மாற்று அதிகாரம் என்பது இன்னொரு அதிகாரத்தின் தொடக்கமா? என்று மலர்ச்செல்வன் அச்சத்தோடு உணர்கிறார். இந்த உணருகை அவரை எழுதத்தூண்டுகிறது. அதொரு நிர்பந்தம். இந்த நிர்பந்த்தின் மொழிதல்தான் மலர்ச்செல்வனின் தனித்துத்திரிதல் கவிதைகள். மலர்ச்செல்வன் வாழுகின்ற சூழலும் காலமும் அவருடைய கவிதைகள் வனைகின்றன. அதற்குரிய மொழியை வழங்குவதும் காலமும் சூழலுமே. ஒரு கவிஞன் தன் கவிதையை காலத்திலும் சூழலிலுமே கண்டெடுக்கின்றான். அது கவிதையின் வடிவமாயினும் சரி அதன் மொழியாயினும் சரி அதன் பொருளாயினும் சரி காலமும் சூழலும் விரிகின்ற பரப்பிலே அவன் அதை எடுத்துக்கொள்கிறான். மலர்ச்செல்வன் தன்னுடைய காலத்திலும் சூழலிலும் கண்டெடுத்து உருவாக்கியளித்துள்ள இந்தக் கவிதைகள் நமக்கு முன்னுள்ள ஒரு வகைச் சவாலே. நம் காலத்தின் நிலையை அப்படியே தொகுத்து நம் முன்னே வைக்கிறார் மலர்ச்செல்வன். வைத்து விட்டு அவர் நம் முகத்தைப் பார்த்தபடி இருக்கிறார். என்ன பதில் நம்மிடம் இருந்து வரும் என்ற ஆவலுடன். சிதையும் நம் காலத்தில் நம்முடைய பாத்திரம் என்ன? நமது அனுபவமும் அறிவும் என்ன செய்யப் போகின்றன? காலத்துயராய் இது இன்னும் எத்தனை யுகத்திற்கு நீளப்போகின்றது. அதிகாரம் குவியப்போகின்றதா? அதிகாரம் என்பது அதன் மெய்யான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தில் துயரம் தானா? அது துயரத்தைப் பெருக்குகிறதா? அதிகாரத்திற்கிடையிலான போட்டியில் நிகழ்வதென்ன? வாழ்வின் சிதைவில் துளிர்த்துப்பெருகும் துயருறுவலிதான துயரத்தை நிலைநிறுத்தத்தான் இத்தனை போட்டிகளும்? அப்படியெனில் வெற்றியென்பது என்ன? துயரத்தைக் கைப்பற்றுவதிலா?

மலர்ச்செல்வன் இவற்றிலிருந்து விலகிச்செல்ல முனைகிறார். ஆனால் அவரால் அப்படி விலகிச்செல்லவும் முடியவில்லை. சூழல் அவரை நிர்ப்பந்திக்கிறது. காலம் அவரை அழுத்துகிறது. இந்த நிலையில் இணைந்தும் விலகியும் மலர்ச்செல்வன் பயணிக்கின்றார். அது ஒருவகைத் தனிப்பயணம். மலர்ச்செல்வன் தனித்துத் திரிகிறார். தனித்துத்திரிய முடியாத காலத்தில் அவர் ஒரு சாகசக்காரனைப்போல தனித்திருக்கிறார். இந்தத் தனியன் தனமே அவரது பலம். அதொருவகை வீரமே. மலர்ச்செல்வன் மிக எளிதாய் ஆனால் வலிதாய் தன் உணர்வைப் பகிர்வதன் மூலம் தன்னுள் எரிகின்ற சுடரை மற்றவர்க்கும் பற்ற வைத்து விடுகிறார். எரிகின்ற காலத்தையும் சூழலையும் இணைப்பதன் மூலம் இந்த வித்தையை அவர் எளிதாக நிகழ்த்திவிடுகிறார்.

ஈழவாழ்வின் கதிகலங்கிய நாட்களின் பதிவுகளாக இந்தக் தொகுதிக் கவிதைகள் பலவுண்டு. அவற்றிற்பல ஏற்கனவே உள்ள ஈழக்கவிதைகளின் தொடர்ச்சியே. இன்னும் சொல்லப்போனால் தென்ஈழக்கவிதைகளின் தொடர்ச்சி இவை எனலாம். அதிலும் சோலைக்கிளிக்கு பின்னான சுவடுகள். சோலைக்கிளிக்குப்பிறகு இந்தத் தொடர்ச்சியில் ஆத்மா றஸ்மி ஓட்டமாவடி அரபாத் அலறி அனார் என வளர்நிலையுண்டு. தென்னீழ சமகால வாழ்க்கை அசாதாரணங்கள் கொண்டது. அதன்வழி அதன் கனவும் நிசமும் அபத்தத்தின் ஈரம் ஊறியது. குருதியிலிருந்து தீ மூண்டெரியும் யதார்த்தம் அது. தீயினுள்ளிருந்து குருதி பீறிட்டோடும் வரலாற்றையுடையது. இதை மலர்ச்செல்வன் உணர்ந்துள்ள முறைமை அல்லது விதமே இந்தக்கவிதைகள். அரசியல் உணர்வு அல்லது அரசியல்இடையீறு கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழ்க்கவிதையைப் பாதித்து வருகிறது. ஈழத்தில் அரசியலின் நிழலற்று எந்தக் கவிஞரும் தங்கள் கவிதைகளை எழுதியதில்லை. நேரடியாகவோ மறைமுகமாகவோ. விலக்காக சில கவிதைகள் வாழ்வின் ஏனைய திசைகளுக்கு நகர்ந்திருக்கலாம். அந்தளவுக்கு அரசியல் ஈழவாழ்வில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அது உயிருடன் விளையாடுகின்றது. உயிர் வாழ்வதற்கு அதைச் சார்ந்தும் விலகியும் இருக்க வேண்டும் என்ற தத்தளிப்பை உருவாக்கியுள்ளது.

மலர்ச்செல்வனுக்கு இந்த அரசியலின் செல்வாக்கு அதிகமுண்டு. முன்னகரும் வகையான வழிகளைத் தொடும் பயணமாக மலர்ச்செல்வன் தன் அரசியல் தேர்வைச் செய்கின்றார். மூன்று காலங்களாக வகை செய்யப்பட்டிருந்தும் இந்தத் தொகுதியின் கவிதைகளில் அடக்குமுறை என்ற இராணுவப் பயங்கரவாதத்திற்கு எதிரான வலுப்பாதைகள் நிகழ்த்தப்படுகின்றன. மிக யதார்த்தமாக தான் வாழுகின்ற மட்டக்களப்பு நிலப்பகுதியின் ஆன்மாவின் நடனத்தை நிகழ்த்தி அந்த யதார்த்தத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார். எளிய சொற்களின்மூலம் உருவாக்கப்படுகிற- அல்லது உருவாகின்ற நிகழ்காலத்தின் தோற்றத்தினையும் அதன் உயிரையும் தருவதற்கு மலர்ச்செல்வனிடம் சொற்கள் உருவாகிவிட்டன. விடுதலை அரசியலின் மீதுள்ள பற்று அல்லது நாட்டம் இந்தத் தொகுதிக் கவிதைக-ளில் முன்னெழுந்தவாறு நிற்கின்றன. அதில் அவருக்குள்ள நம்பிக்கைகள் சிதறல்கள்முனைப்புக்கள் தெளிவுகள் தெளிவின்மைகள் சரிவுகள் விலகல்கள் கொந்தளிப்புக்கள் அடங்குதல்கள் குற்றவுணர்கள் இயலாமைகள் எல்லாமே சாட்சிப்படுத்தப்படுகின்றன. உள்ளுக்குள்ளே ஊடுருவிப்பதிவாகியிருக்கும் கொந்தளிப்பின் நடனம் நிழலாகவும் நிஜமாகவும் தெரிகின்றது. சகலத்தையும் காட்சிபுலமாக விரிக்கும் உத்தியைப் பின்பற்றுவதன் மூலம் எல்லாவற்றிற்கும் ஒரு சுவடுநிலையை ஆதார நிலையை மலர்ச்செல்வன் உருவாக்குகிறார்.

அழிவின் சுவடுகளும் வலியும் அதன் கருநிழலும் காலத்தால் கலைந்து போய்விட்டாலும் மலர்ச்செல்வனும் ஈழக்கவிதைகளும் ஆதாரப்படுத்துவது இந்தச் சுவடுகளையே. இது காலத்தால் நகர்த்தமுடியாத காயங்களாக் இருப்பதற்கு இவற்றிக்குள் துடிக்கும் ஆன்மாவே பலம். எண்பதிற்குப் பின்னான ஈழக்கவி-தயின் இன்னொரு சுவடான மலர்ச்செல்வன் அதிலிருந்து சில இடங்களில் விலகுகிறார். அந்த விலகலே அவரது அடையாளம். அதுவே தமிழ்க்கவிதையில் எதிர்பார்க்கப்படுவது. ஒரு மொழிக்குப் புதுமுகங்களே அவசியமானது. சாயல்கள் இரண்டாம் பட்சம் அல்லது நாலாம் பட்சம். சாயல்களுடைய கவிதையும் அப்படியே. கடந்த காலத்தின் நினைவுகளில் வீழ்ந்து சுழலும் போது தவிர்க்க முடியாமல் சாயலோடான மொழிக்கும் அதன் வெக்கை தகிக்கும் நிழலுக்கும் சென்று விடுகிறார் மலர்ச்செல்வன். இது பயணமல்ல. பயணத்திற்கு முரணானது. அவர் இதிலிருந்து மீள வேண்டும்.

மலர்ச்செல்வன் தன் அடையாளங்களோடு பல இடங்களில் செல்லும் பயணம் வேறானது. அதுவே தொடர வேண்டும். மலர்ச்செல்வனுக்குள் நிகழ்ந்தபடியிருக்கும் உணருகை புதிய பயணத்தின் சுவட்டுக்குரியது. அது மேலும் பல திசைகளைத் திறக்கும்.

**கருணாகரன்**
நன்றி புல்வெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான தொழில் நுட்பத்தின் முன்னோடிகள்

இந்துக்களா?

அ.மயூரன் - லண்டன்.

இன்று விஞ்ஞானம் பல மடங்கு வளர்ந்துவிட்டது. வான்வெளியில் விண்கலங்கள் ஏவுகணைகள். எனப்பல விண்ணை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது. இவைகள் அனைத்தும் விண்வெளி உலகின் தத்துவமேதை எனப்படும் ரஷ்யா நாட்டைச் சேர்ந்த கொன்ஸ்டன்டின் ஸியோல்கோவிஸ்கி என்பவரின் தீர்க்க தரிசனத்தால் உருவானவையே

இன்று உலகத்தில் நாம் வானை அளந்துகொண்டிருக்கின்ற விமானங்களுக்கு ஆதாரமிட்டவர்கள் ரைட் சகோதரர்களே (1903) என உலகம் புழகாங்கிதம் அடைந்தாலும் உண்மையில் முதன் முதலில் விமானத்தைக் கண்டுபிடித்தவர் கொன்ஸ்டன்டின் ஸியோல்கோவிஸ்கி என்பவரே 1894ஆம் ஆண்டு அவர் இந்தசாதனையை நடாத்தி முடித்தார்.

உலகில் உள்ள பல நாட்டு நூல்களிலும் விமானங்கள் ஏவுகணைகள் பற்றிய செய்திகள் காணப்பட்டாலும் கூட தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் மிகப்பழைய காலம் முதலே இவை பற்றி குறிப்புக்கள் காணப்படுவதோடு அவற்றின் அமைப்பு முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து விமானத்தின் முன்னோடிகள் நம் மூதாதையர்களான இந்துக்களா? என்று நமக்கு எண்ணத் தோன்றுகின்து

ரிக்வேதம். இராமாயணம். மகாபாரதம். சமரங்கன சூத்திரா. வைமானிக சாஸ்திரம் எனப்பழைய நூல்களில் விமானம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறது. இவை வெறும் கற்பனையில் உருவானவை என்றோ மூடநம்பிக்கையை விதைக்கின்ற புராண இதிகாசங்கள் என்றோ நம்மால் அப்படியே ஒதுக்கி விடவும் முடியவில்லை.

ரிக் வேதமானது நான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என கருதப்படுகிறது. இதில் போர்க்கடவுளான இந்திரன் விமானரதத்தில் பறந்து வந்து அசுரர்கள் மீது போர் நடத்தியதாகவும் மயன் இவ் வானவூர்தியை ஓட்டியதாகவும் தகவல்கள் உள்ளன அத்துடன் வருணன் போன்ற தேவர்கள் மிகச்சிறந்த வானவூர்தியில் வானவெளியில் சென்றதாகவும் புஷன் என்பவன் மிகச்சிறந்த ஓட்டியாக திகழ்ந்தான். என்ற குறிப்பும் காணப்படுகிறது. இது கற்பனையில் உருவானது எனக்கூறினாலும் வானில் பறப்பது சாத்தியமே என்க்கூறியதிலிருந்து விமானத்தின் முன்னோடிகளாக எமது இந்துக்கள் திகழ்ந்தனர் எனக்கருதவும் இடமுண்டு.

அடுத்து இராமாயண காலத்தில் இராவணன் என்னும் தமிழ் மன்னன் புஷ்பக விமானத்தில் பறந்ததாகவும். மயன் என்பவனின் கைவண்ணத்தினால் இது உருவாகியதாகவும். குபேரன் என்னும் மன்னனுக்கே இப்புஷ்பக விமானம் சொந்தமானது எனவும் இதை இராவணன் கைப்பற்றி அதில் அவன் விண்வெளி முதல் கொண்டு பல உலகங்களையும் சுற்றி வந்தான் எனவும் இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். இது வால்மீகியின் கற்பனையாகக் கூட இருக்கலாம். ஆனால் இவற்றை ஆதாரப்படுத்துவது போல் இலங்கையிலே நுவரேலியா என்னும் மாவட்டத்திலே இராவணன் என்னும் மாமன்னன் இராமரின் மனைவியான சீதையை சிறை வைத்ததாகக் கூறப்படும் சீதாஎலிய என்று ஒரு இடம் உண்டு. இந்த இடத்திலிருந்து உலகத்தின் முடிவு (ுழசடன நுனெ ) என்று அழைக்கப்படும் இடம் நோக்கி கிட்டத்தட்ட 8 மைல் தூரம் வரை சென்றால் " குவான் பொல "(புஎயயப ‟ழடய) என்ற இடத்தை அடையலாம் இச் சிங்களப் பெயரின் தமிழ் வடிவம் விமானச்சந்தை என்பதே இந்த இடத்தில் விமானத்தின் இரு ஓடுபாதைகள் இருந்ததற்கான அடையாளங்களாக மலையில் நீண்ட மலைச் சமவெளிகளைக் கொண்ட இரு பிரதேசங்கள் உண்டு. இது இராவணன் பயன் படுத்தியதாகக் கூறப்படும் புஷ்பக விமானத்தின் ஓடுபாதை என்பது பலரது கூற்று. இதை உறுதிப் படுத்துவது போல் 1971ஆம் அமெரிக்க புவியியல் ஆய்வாளர் ஒருவர் இராவணன் என்றதொரு தமிழ் மன்னன் வானவூர்தியுடன் சிறப்பான ஆட்சி செய்தான். என்பதனை அறிந்து இப்பிரதேசத்திற்கு வந்து இப்பிரதேசத்தினை ஆராய்ந்து இது இராமாயணத்தில் வரும் இராவணன் பயன்படுத்திய புஷ்பக விமானத்தின் ஓடுபாதையாக முன்னர் இருந்திருக்கலாம் எனவும். அதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. என்று தனது நூலில் கூறியுள்ளார். இதுவும் அவரின் கற்பனை என்று கூடக் கூறலாம்.

இக்கருத்துக் கூட கற்பனை என்று மட்டுமே நம்மால் எண்ண முடிகின்றது. உண்மையில் விஞ்ஞானக் கருவிகள் இருக்க முடியாத அந்தக்காலத்தில் ஆகாயத்தில் விமானங்கள் மூலம் பறப்பது பற்றியும் பல மைல்கள் ஏவுகணைகள் போல நெடுந்தூரம் தாண்டிச் சென்று தாக்கக் கூடிய அஸ்திரங்கள் பற்றியும் எப்படி அவர்களால் கற்பனை கூடச் செய்ய முடிந்தது. என்று நாம் சற்று நேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாகவும் எம் இந்துக்களான பழந்தமிழர் விமானத்தின் முன்னோடிகள் தானா ஆராயவும் தலைப்பட்டவர்களாக உள்ளோம். அத்துடன் மயனால் எழுதப்பட்ட மயன் மதம் என்னும் நூலிலும் அதன் விளக்க உரை காட்டும் நூலிலும் வாகவூர்தியைப் பற்றியும் அவைகளின் அமைப்புமுறை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமரங்கன சூத்திரா 11ம் நூற்றாண்டில் "இராமச்சந்திர தீட்சிதர்" என்பவரால் எழுதப்பட்டது என்பார்கள். இதில் வானவெளிக்கப்பல்கள் எப்படிச் செலுத்தப்பட்டன. அதன் அமைப்பு முறை. என்பன பற்றி விரிவாகக்கூறுகின்றன. அதில் மூன்று விதங்களில் வான்வெளிக்கப்பல்களைச் செலுத்த முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறது..

1. கீழிலிருந்து(பூமியிலிருந்து) விண்ணை நோக்கிப்பறப்பது.
2. வானவெளியில் பல திசைகளில் பறப்பது.
3. மேலிருந்து(விண்ணிலிருந்து) கீழே இறங்குவது. (பூமி நோக்கி வருதல்)

சில வான்வெளிக்கப்பல்களில் சூரியமண்டலம். மற்றும் நட்சத்திரங்கள் வரை சென்றுவர முடியும் என்றும் இவை மிக வேகமாகச் செல்லக்கூடியவை. அத்துடன் அவை பூமியிலிருந்து பறக்கும் போது அதன் ஒலி புவியில் உள்ளவர்களுக்கு மிக மெல்லிதாகவே கேட்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் வான்வெளி விமானங்கள். விண்வெளியில் ஏவப்படும் போர்க்கருவிகள் பற்றியெல்லாம் கூறப்பட்டாலும் கூட இதில் சில விடயங்கள் இருந்திருக்கலாம் என்று கருதலாமே தவிர. அவை இருந்தன. என்று கூறுவதற்கு புராண இதிகாசங்கள் ஆதாரமாகிவிடாது. அத்துடன் இதில் வரும் பாத்திரங்கள் கடவுளாகவும் அவதாரங்களாகவும் இருப்பதால் அவர்களால் மனிதனால் நடாத்தமுடியாத அற்புதங்களை நிகழ்த்தினார்கள் எனச்சொல்லலாம். நம்முன்னோர்கள் கர்ன பரம்பரையாகச் சொல்லப்பட்ட கதைகளை காவியமாக வடித்தனர் இருந்த போதும் அந்தக்காவியங்களில் கற்பனை இடம் பெறுவது தவிர்க்க முடியாததே. இருந்தபோதும் அந்தக்கால மனிதருக்கு விமானம் பற்றி தெளிவான சிந்தனை வெளிப்பட்டது வியப்பானதே.

அடுத்து வைமானிகா சாஸ்திரம் எனும் நூல் "பரத்துவாஜரால் "எழுதப்பட்டு இப்போதுள்ள சமஸ்கிருத வடிவில் சுப்புராய சாஸ்திரியால் உருவாக்கப்பட்டது. எனினும் இதை மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர்கள் இதனை "பறக்கும் சாஸ்திரம் பற்றிய விஞ்ஞானம் ". என்றே குறிப்பிட்டுள்ளனர். இதில் உள்ள கருத்துக்கள் பழங்கால விஞ்ஞான அறிவுக்கு அப்பாற்பட்டு நவீனகால விஞ்ஞான அறிவையும் மிஞ்சி நிற்கின்றது.

விமானம் என்றால் என்ன என வைமானிகா சாஸ்திரம் இலக்கணம் கூறும் போது ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு காற்று வழியாக பறந்து செல்லும் கருவியே விமானம் என்கிறது. விமானத்தில் 32 சூட்சுமங்கள் இருப்பதாகவும் இவை அனைத்தும் விமானிக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் கூறியதுடன் விமான அமைப்பு. விமானம் பறப்பது (ஏறுவது). இறக்கும் போது விமானத்தின் கட்டப்பாடு. எனும் 3 தலைப்புக்களில் இந்த 32 சூட்சுமங்களும் அடக்குகின்றன.

அத்துடன் இதில் (வைமானிகா சாஸ்திரம்) விமான ஓட்டத்தைப் பதிவு செய்யும் கருவி. விமானத்திலிருந்து எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகள். விஷவாயுக்கள். இறக்கைகளை நீட்டுவதும் மடக்குவதும். பருவநிலைகளை உணர்த்தும் அமைப்பு சூரியசக்தியைப் பயன்படுத்துதல். விமான ஓட்டி அணிய வேண்டிய உடை. உணவுப்பழக்க வழக்கம். விமானம் செய்யப்பயன்படுத்தப்படும் உலோகம். என்பன பற்றியெல்லாம் விரிவாகக் கூறுகின்றது. குறிப்பாக விமானம் செய்யப்பயன்படும் உலோகம் பற்றிக் கூறும் போது வெப்பத்தைக் கிரகித்துக் கொள்ளும் உலோகமே உகந்தது எனக் கூறுகிறது. அத்துடன் விமானம் செய்யப் பயன்படும் உலோகங்களின் வகைகளும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் விமானத்தில் ஏழுவகையான கண்ணாடிகளும் லென்சுகளும் பொருத்தப்பட வேண்டும். இந்த லென்சுகள் ஆயுதங்களைப் பிரயோகிக்க உதவியதாகவும் இந்த வைமானிகா சாஸ்திரம் கூறுகின்றது. அத்துடன் எதிரி விமானியின் கண்களை இருட்டாக்க லென்சுகளைப் பயன்படுத்த வேண்டும். என்றும் சூரிய ஒளியில் மின்சத்தியைப்பெற்று அதன் மூலம் எதிரி விமானிகளை அழிக்கும் முறைகளையும் கூறிப்பிட்டுள்ளது. இது நவீன விமானத்தின் லேசர் தொழில் நுட்பத்தையும் விஞ்சி நிற்பதிலிருந்து விமானத்தின் முன்னோடிகள் எம் மூதாதையர்களா? என எண்ணத் தோன்றுகிறதல்லவா.

மேலும் ஏழு மோட்டார்கள் மூலம் இவ்விமானங்களை இயக்க சக்தி கிடைப்பதாகவும். சூரியசக்தி. இரசாயண சக்தி. மின்சக்தி. என்பவற்றின் மூலம் விமானம் முன்னோக்கி செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பறப்புக்களை மேற்கொண்டதாகவும் இதில் பெரும்பாலும் சூரியஒளியே பயன்படுத்தப்பட்டது. எனும் தகவலும் (வைமானிகா சாஸ்திரத்தில்) உள்ளது. இந்தத்தகவல் நமக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. அல்லவா!. அத்துடன் இதில் ருக்மஇ சுந்தரஇ திரிபுரஇ சகுணஇ என நான்கு வகையான விமானவகைகள் இருந்ததாகக் கூறுகின்றது. அதில் ருக்மவிமானம்இ சுந்தவி-மானம்இ ஆகியன சந்திர மண்டலத்திற்குச் சென்ற அப்போலோ விண்கலத்தை போன்ற அமைப்புடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

திரிபுர விமானம் தரையிலும் நீரிலும் செல்லக்கூடியது. இதன் வேகம் குறைவானது. என்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் சகுன விமானமானது நம்முடைய நவீன விமானத்திற்கும் ராக்கெட்டுக்கும் இடைப்பட்ட அமைப்பைக்கொண்டது. இந்த விமானம் மூலம் எந்தக் கிரகத்திற்கும் சென்றுவர முடியும். என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இது வெறும் கற்பனையில் உருவான நூல் (வைமானிகா சாஸ்திரம்) என்று கூறமுடியாதுள்ளது. எனினும் அவற்றை கற்பனை எனக் கூறினாலும் அதில் உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானம் பற்றி வியத்தகு நவீன தொழில் நுணுக்கங்கள் பற்றி பழங்கால மனிதன் ஒருவனுக்குத் தெரிந்திருந்தது வியப்பானதே

சங்க இலக்கியமான புறநானூறு. மணிமேகலை. சீவகசிந்தாமணி. பெருங்கதை. போன்றவற்றிலும் வானவூர்தி பற்றிய கருத்து காணப்படுகிறது. பெருங்கதை என்னும் பழந்தமிழ்க்காவ-ியத்தில் வானவூர்தி வடிவமும் அதை இயக்கும் விதமும் விவரிக்கப்பட்டுள்ளன. சீவகசிந்தாமணியில் வரும் மயிற்பொறியின் (மயில் போன்ற பறக்கும் பொருள்) செய்தியானது நமக்கு வியப்பினை ஏற்படுத்துகிறது. அதன் பொறியினை வலஞ்சுழி மற்றும் இடஞ்சுழியாக திருகுவதன் மூலம் அம்மயிற்பொறி வானமேகங்களிடையே பறக்கவோ காண்பவர் மயிர்சிலிர்க்கும் வகையில் தரையில் இறங்கச்செய்யவோ முடியும் என்கின்றது அந்நூல். இராமாயணத்தில் இராவணன் செலுத்திய புட்பக விமானம் சீவகசிந்தாமணியில் விவரித்த மயிற்பொறி விமானத்தை விட எல்லாவகையிலும் மேம்பட்டது. என்கின்றனர் சான்றோர்.

மணிமேகலையிலும் கூட வான்வழிப்பயணங்கள் பற்றிச்சித்தரிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்திலும் வானவூர்தி பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. சங்கஇலக்கியமான புறநானூற்றில்

வலவன் ஏவா வான ஊர்தி (புறம் -27. 8)

என்ற வரி விமானத்தை ஓட்டுபவர் இல்லா வானவூர்தியைக் கொண்டிருந்தான். என்கின்ற கருத்து நம் தலையைச் சுற்ற வைக்கின்றது. விமான ஓட்டியை வலவன் எனஅழைக்கின்றது புறநானூறு. இது நிச்சயமாக கற்பனையில் உருவான கதை என கூற முடியாது. புறநானூற்றுத்தமிழன் உண்மையில் நமக்கு முன்னோடிகளே! அந்த முன்னோட்டத்தை இன்றைய தமிழராகிய நாம் உணரவில்லை மாறாக தமிழை மறக்கவே முனைவது கவலையையே தருகின்றது.

ஒரு காலத்தில் கற்பனையாக இருப்பது பிறிதொரு காலத்தில் நிஜமாகி விடுவதுண்டு உதாரணமாக ஜுல்வொர்னி என்பவர் 100 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய உலகைச்சுற்றிவர எண்பது நாட்கள். எனும் கற்பனை நூலில் நீருக்கடியில் செல்லும் கப்பல்கள். சந்திர மண்டலத்திற்கு வான்வெளிக்கப்பல்களின் மூலம் பயணம் செய்வது பற்றியெல்லாம் எழுதியிருந்தார். ஆங்கிலத்தில் விமானப் பயணம் பற்றி எழுந்த நூல்களில் இதுவே முக்கியமானதாகும். பொதுவாக ஆங்கிலத்தில் எழுந்த நூல்கள் எல்லாம் பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னரே எழுந்தது எனலாம்

விண்ணியல் பற்றிய வரலாற்றை இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே மனிதஇனம் அறிந்திருந்தது. ஆனால் இது எங்கே அறிமுகமானது எனத்தெரியவில்லை. தமிழில் மட்டுமல்ல வேறு மொழிகளிலும் இவைபற்றிய அறிவுகாணப்பட்டது. 1232 களில் சீனத்தார்த்தாரி இனத்தவர்கள் ராக்கட்கள் பயன்படுத்தியதற்கான வரலாற்றுச்சான்றாக மொங்கோலிய அரசனான ஜெங்கிஸ்கானின் மகனான ஒக்டாயின் தலைமையின்கீழ் மொங்கோலியர்கள் சீனத் தார்த்தாரியர்களின் காய்பெங்பூ நகரைத்தாக்கியபோது சீனர்கள் தமது நகரைக்காக்க ராக்கட்களை பயன்படுத்தினர். என்பதிலிருந்து அவர்கள் வானியல் பற்றி அறிந்திருந்தனர். என்பதனை உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இது பிற்பட்ட காலத்திலேயே இதை இவர்கள் அறிந்திருந்தனர் எனவே விமான தொழில் நுட்பத்தின் முன்னோடிகள் நிச்சயமாக இந்துக்களாகவே இருந்திருக்க வாய்ப்புள்ளது.

மேலும் கி.பி.1280ல் ஹசன் அல்ரமா என்பவரால் அரபு மொழியில் எழுதப்பட்ட கையெழுத்துப்பிரதி ஒன்றில் ராக்கட்களை அமைப்பது விண்வெளியில் பயணத்தை மேற்கொள்வது அவற்றை எப்படி அமைப்பது வெடிமருந்து தயாரிப்பது என்பதுபற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறது. ஆங்கிலேயருக்கெதிராக 1780இல் இளவரசன் ஹைதர்அலிகான் ராக்கட் தாக்குதல் செய்து ஆங்கிலேயரை வியப்பில் ஆழ்தினான் என்றுஒரு குறிப்பும் உண்டு. இவையும் பிற்பட்ட காலத்தில் எழுந்தவைகளே எனலாம். அத்துடன் கிறிஸ்துவின் காலத்திலும் வானதேவதைகள் பற்றிக் குறிப்பிட்டாலும் அதற்கு முன்னரே இந்து இலக்கியங்களில் விமானம் பற்றிய சிந்தனை காணப்படுகிறது.

சீன. மற்றும் இலத்தீன் மொழிகளில் விமானம் பற்றிய செய்திகள் அந்நூல்களில் காணப்பட்டாலும் அவை எல்லாம் பிற்காலத்தில் எழுந்தவைகளே! எனலாம் ஆகவே இந்துதர்மத்தைக் கூறுகின்ற புராணங்கள். இதிகாசங்கள் காப்பியங்கள். ஆகியவற்றில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விமானம் பற்றிய சிந்தனை இருந்திருக்கின்றது. இதிலிருந்து விமானத்தொழில் நுட்பத்தின் முன்னோடிகள் இந்துக்களாகவே இருந்திருக்கின்றார்கள் என்ற கருத்தே முதன்மை பெறுகின்றது. இவை கற்பனைக்கதை எனக்கூறினாலும் இதிலுள்ள விமானத் தொழில்நுட்பம் வியப்புக்குரியதே.

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருனாகரன் கவிதைகள்

பலியாட்டின் கண்கள்

எனது பலியாட்டைக் கொண்டு வந்திருக்கிறேன்
ஒரு பரிசு
உயிரும் குரதியுமாகியது
இதில் கவலைக்கோ வெட்கத்திற்கோ
இடமில்லை என்றார்கள்
என்றபோதும்
நம் நிழலைக்காணுகையில்
அச்சமாயிருக்கிறது

## நான் கண்டேன்

உனது நிழலிலிருந்து குரதி பீறிடுவதை
எனது நிழலிலிருந்து
நெருப்பு சுவாலை விடுவதை
ஒரு வாழையிலையில்
நமது முகங்கள் படைக்கப்பட்டிருந்தன
நமது விருந்திற்காகவே
எனது புன்னகையை நீ தின்றாய்
உனது சிரிப்பொலியை நான் குடித்தேன்

## பலியாட்டின் மணியொலி

விருந்தை முடித்து வைத்தது
நீ விடைபெற்றபோது
விடுவித்த கையில் பார்த்தாயா
காயாத குருதியின்
அச்சமூட்டும் அழகிய கண்களை
பலியாடு அந்தக்கண்களிலிலிருந்து
நழுவிப்போய்க்கொண்டிருந்ததை
நாம் கவனிக்கவில்லை
என்பது இப்போது
ஞாபகமிருக்கிறது

## இனி

சவப்பெட்டியின் நிழலில் துளிர்த்த வேர்கள்
அதி பயங்கரமாகவும்
சாவகாசமாகவும்
வளர்ந்து செல்கின்றன
என் தூக்கத்தினூடும்
விழிப்பினூடும்
ஞாபகங்கொள்ள முடியாத
பூச்செடிகளில்
யாரோ விட்டுச் சென்ற
புன் சிரிப்பின்மீது
இரத்தத்துளிகளின் நடனம் பாம்பின் நளினத்தோடு
காதருகில்
அச்சமூட்டும் ரகசியங்களைச்சொல்லும் எதிரி
அழைத்துச் சென்ற விருந்தில்
எதிர்பாராத விதமாகக் கண்டேன்
கிறிஸ்துவை
தலைகவிழ்ந்தபடியிருந்தார் கிறிஸ்து

## தியானமா அவமானமா

கனவுகளில் எரிந்து கொண்டிருந்தது காலம்
பன்னூறு ஆண்டுகால
தோல்வியின் நிழலைப்பிரதிபலிக்கும்
அந்த விழிகளில்
சகிப்பின் கடைசிக்கணம்
முடிவடைவதைக் கண்டேன்

## கவிதைகள்

காணாமற்போனவனின் புன்னகை
ஒரு பருவத்தின் நிழலில் கண்டேன்
காணாமற்போனவனின் புன்னகையை
கடந்துபோகமுடியாதபடி
கொதித்துக்கொண்டிருந்தது தீத்துண்டாக
அந்தப்புன்னகை
அதில் காயாமலே இருந்தன
இரண்டு கண்ணீர்த்துளிகளும்
அவனுடைய குருதியும்
திரும்பிச்செல்லவும் முடியவில்லை
காணாமற்போனவனின் புன்னகையை விட்டு
அங்கிருக்கவும் முடியாது
காயமறுக்கும்
கண்ணீர்த்துளிகளின் முன்னாலும்
குருதியின் அருகாமையிலும்.

சுற்றி வளைக்கப்பட்ட கிராமத்தின் பதுங்குகுழி
வானத்தை நான் பார்க்கவில்லை
நட்சத்திரங்களையும் காணவில்லை
பதுங்குகுழியின்
இருளுக்குள் வீழ்ந்த வாழ்வின்
சருகு நான்
சூரியன் வந்ததா சென்றதா
நானறியேன்
நிலவின் ஒளியும் மறந்து போயிற்று
நிலம் அதிர்கிறது
குருதியின் மணத்தையும்
மரணத்தின்அருகாமையையும் உணர்கிறேன்
கந்தக நெடில்
கபாலத்தைப் பிளக்கிறது
வீரர்கள் முழங்கிக்கொண்டேயிருக்கிறார்கள்
அழியும் வாழ்வின் பிரகடனத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு துப்பாக்கியிலும்
ஒவ்வொரு பீரங்கியிலும்
பூக்கள் இனி எப்படியிருக்கும்
மரங்கள் மிஞ்சியிருக்குமா
பறவைகளின் சிறகுகளில்
சாவு வந்து குந்திக்கொண்டிருக்கும்
காலம் இதுவல்லவா
இந்தப் பதுங்கு குழிக்கு
நம் எதிர்காலத்தைக்காப்பாற்றும்
கருணையும் வலிமையுமிருக்கிறதா
அல்லது
எதிரியிடம் பலியிடும்
ஒற்றனைப்போலக் காத்திருக்கிறதா

## விலகல்

இன்றும் நான் பேச நினைத்தேன்
வார்த்தைகள் சலிப்பூட்டின
ஒளி அதிக சங்கடத்தைத் தந்தபோது
வெளியே
சுவரினோரம்
நிழலும் இருளும் கலந்திருந்த
அறைவில் ஒதுங்கினேன்
உள்ளே
இசையின் உக்கிரமும்
நடனத்தின் ஆவேசமும்
சுவர்களிலும் நிழல்களிலும் பிரதிபலித்தன
யாரும் என்னைக் கவனிக்கவில்லை.

## பிணத்தின் ருஷி

ஒரு ஆட்டுக்குட்டி
என்றும் நினைப்பதில்லை
தன் கழுத்தில் விழக்காத்திருக்கும் கத்தியை
என்றும் அது அறிவதில்லை
தன்னை வளர்ப்போனே
ஒரு கொலையாளன் என்பதை
சாவுக்குப்பிறகும்
தனது குருதியும் மாமிசமும்
மகிழ்ச்சிக்குரிய பண்டமாகிப் போகுமென்று
துள்ளுகிறது மகிழ்ச்சியுடன்
அழகாக
நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது.
பிறகொருநாள் மடிகிறது
நமது குருரவெளியில்
எந்த நிபந்தனையுமின்றி
அது
நமக்கு ருஷியாகிப்போகிறது.

## கவிதைகள்

பிரதிபலிப்பான்கள் பற்றி மேலும் சில
பிரதிபலிப்பானகளின் முகத்தில்
இல்லையொரு புதுப்புன்னகை
இல்லையொரு புது மொழி
இல்லையொரு புதுக்குரல்
இல்லையெந்தப்புதிதும்
உண்மையும்
இல்லையென்றும்
பிரதிபலிப்பான்களுக்குச் சொந்த முகமும்
ஓரிதயமும்.

## நீ அவனைப் பிரதிபலிக்கிறாய்

அவன் அவரைப் பிரதிபலிக்கின்றான்
அவர் பிரதிபலிக்கவும் ஒருவரிருக்கிறார்
உன்னை இவன் பிரதிபலிக்கிறான்.
கடவுளே
இவனைப் பிரதிபலிக்காதிருக்கட்டும்
ஒருவரும்.
பிரதிபலிப்பான்களின் சம்பாஷணையில்
ஒழிந்திருக்கிறது கபடத்தின் சர்ப்ப நிழல்
பிரதிபலிப்பான்களின்
செயல்களிலில்லைச் சுயமும் துளிர்ப்பும்.
பரதிபலிப்பான்களிடம் எப்போதுமிருப்பதில்லை
அன்புக்கும் நட்புக்குமான
அந்ததரங்கமும் வெளிப்படையும்.
ஒரு மாறாத புண்ணை
ஒவ்வொரு பிரதிபலிப்பான்களும்
வைத்துக்கொண்டிருக்கிறார்கள்
இதயமென்றதற்குப் பெயரிட்டு
அதில் நெளிகின்றன
புழுத்த பொய்கள்.
பிரதிபலிப்பான்களிடமிருந்து
நழுவிக்கொண்டிருக்கிறது
நிகழ்காலத்தின் மூச்சும்
எதிர் காலத்தின் விதையும்.

## ஒரு மைதானக்காட்சி

ஆட்டம் முடிந்தபிறகு வெளித்திருக்கிறது
மைதானம்
வீரர்கள் போய்விட்டார்கள்
ஆரவாரங்களும் போய்விட்டன
ஆட்டம்பற்றிய கதைகளோடும்
விமர்சனங்களோடும்
ரசிகர்களும் போய்விட்டார்கள்.
மைதானத்தில் ஆடியபந்து
யாருடைய கவனமுமின்றி ஓய்ந்திருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே
இப்போது
யாருக்காவது நினைவிருக்குமா அந்தப்பந்தை?
மைதானத்துக்கும் பந்துக்குமிடையில்
ரகசியமாகப்படர்ந்திருந்த மௌனவெளியில்
ஒப்பற்ற காயங்களோடு
வெற்றிபெற முடியாத வீரர்கள்
நடந்துசென்ற காட்சி உலுக்குகிறது
அரங்கத்திலும் அரங்கத்துக்கப்பாலும்.

## பறவைக்காதல்

பறவையின் சிறகில்
காத்திருக்கிறது பயணமும் பயணவெளியும்
பறவையின் உயிரும்
அழகும்
பறவையின் அடையாளமும்
அதன் சிறகில்
நிகழ்கிறது பயணமும் பயணவெளியும்
காற்றின் துணையும்
வெளியிலும் காற்றிலும்
தன்னை நிகழ்த்தும் பறவை
அடைகிறது தன் புள்ளியை
எனினும் அது தன் பயணத்தின்
சுவடுகளை விட்டுச்செல்லவுமில்லை
எடுத்துச்செல்லவுமில்லை
காற்றையும் சிறகையும் இணைக்கும்
நுட்பத்தை
கற்ற பறவை சொல்லித்தருமா எனக்கும்
தன் வாழ்தலின் நுட்பங்களை
காற்றில் தன்னை நிகழ்த்தும்
நுட்பத்தினூடாக
அது கட்டுகிறது
தன் பயணக்கூட்டை
சிறகிலேயே
அதன் பயணமும் இளைப்பாறலும்
நிகழ்கின்றன
அதனதன் தருணங்களில்
கூடவே
பயணிக்கும்போது இளைப்பாறலும்
இளைப்பாறலின்போது பயணமும்.

## மேலுமொரு விருந்தாளி

வாருங்கள்
கைதுசெய்யப்படுவோனின் வரவேற்பில்
ஒரு ருஷியுண்டு
முழுப்பணிவுடைய வரவேற்பல்லவா இது
கைதி குற்றவாளியா இல்லையா என்பது
யாருக்கும் முக்கியமல்ல
அவன் கைதியென்பதே போதுமானது
கைது செய்யப்படுவோனின்
நிழல்கூடச்சந்தேகிக்கப்படுகிறது.
யாராலும் அனுமதிக்கப்படாத
அவனுடைய கனவு
அவனைக்கொண்டுபோகிறது
அவனுடைய வெளிகளுக்கு

## கைதி

கண்காணிக்கப்படும் வலயங்களில்
நிழலுக்கும் அனுமதியில்லை
தனிமைப்படுத்தப்படுதலில் தொடங்குகிறது
அவனுக்கான தண்டனை
இருள்
அவனுடைய நிழலையும்துண்டித்து விட்டது
அல்லது சிறைப்பிடித்து விட்டது.
இப்போதவன் கலவரங்களிலிருந்து விடுபட்ட
அமைதிப்பிராந்தியத்தின் பிரதிநிதி
திரளும் எண்ண அலைகளில்
உருவாகிறது அவனுடைய
ஒளிவெளி
தளமாற்றத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது
அவனுடைய இன்னொரு மண்டலம்

## நெல்சன் மண்டேலாவுக்கு வாழ்த்துகள்

இருளிலும் தனிமையிலும் வாழும் ரகசியத்தின்
விதையைத்தந்தவரல்லவா நீர்.

## ஒரு வாழ்த்துப்பாடல்

யாருந்திரும்பவில்லை
நினைவுகளைப் புதைக்கமுடியாச் சகதியில்
கிழிபட்டுக்கிடந்ததென் பறவை.
பிரிவு சொல்ல யாருமில்லை
வரவுசொல்லவும் யாருமில்லை
கண்ணெதிரே ஒளியைத்திருடிப்போகிறான்
பகற்கள்வன்
சகதியில் சிக்கிய பிணமாகக்கிடக்கிறேன்
இருள்
பயங்கர வனாந்திரமாக திரண்டு வருகிறது.
யாரிடம் முறையிடுவேன்?

## அன்னா அக்மதோவா

என்னரும் சோதரி
துயரம் உன்னுடன் மட்டும் முடியவில்லை
இதோ என்னுடைய காலடியிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகள் சூழ்கின்றன
கொட்டும் பனியில்
இரும்புக்கதவுகளின் வெளியே நீ நின்றாய்
உள்வெளியென்றெல்லாப்பிராந்தியத்திலும்
வெக்கை தகிக்க
நானோ
உள்ளுமில்லை வெளியுமில்லை
கதவிடுக்கில்.
பூனையின் நிழல்
நான் நினைக்கவில்லை
ஒரு போதும்
ஒரு பூனை இத்தனை கவர்ச்சியானதென்றும்
இவ்வளவு பயங்கரமானதென்றும்.
என் படுக்கையில்
அதன் உறக்கம்
பன்னெடுங்கால அமைதியின்
ஊற்றைப் பிரவாகித்தபடி இருக்கிறது.
திகிலூட்டும்படி
பூனையின் உறக்கத்தைக்
காவல் காத்தவாறு
ஒரு போர்ப்படையாக
அதன் நகங்கள்
வேட்டையின் ருஷியையும்
வெற்றியின் நம்பிக்கையையும்
உறுதிப்படுத்தியபடி
பூனையின் குரலுக்கும்
அதன் கண்களுக்கும்
அதன் நடைக்கும்
அதன் உறக்கத்துக்கும்
ஏதேனும் தொடர்பிருக்கிறதா
கவர்ச்சியாயும்
மிகப்பயங்கரமாயும்
பூனை சுழன்று கொண்டிருக்கும்
நிழலில்
பூனையின் குரல்
வன்மத்துக்கும் சினேகத்துக்குமாக
ஒலிக்கிறது
அதன்
ஊடுருவும் கண்களில்
இன்னும் தீராதிருக்கிறது
பசி

## அணில் மரம் பூனை

மாதுளைச் செடிக்கும்
குறுக்கு வேலிக்குமிடையில்
தாவித்திரியும்
அணிலின் கனவில்
தின்று முடித்த பழத்தின் ஞாபகங்களா
தின்னப்போகும் கனிகளின் ருஷியா
அணிலின் கண்களில்
தீராத் தவிப்பில் துடிக்கிறது
அச்சத்தின் குரூர நிழல்
அணிலின் காதலுக்கு
இருக்கின்றன மரங்கள்
காதல் முடிய
மரத்தின் கனிகளும் தீரும்
மரத்தில் நின்றே
மரப்பழத்தைத் தின்றாறிக்
கொண்டாடும் அணில்
மரத்தின் கீழே
வேட்டையின் நுட்பங்களோடு
பாயும் முனைப்பில் பூனை

யார் வாய்க்கு
யாதோ

## சிரிக்கும் பறவை

இன்னும் கொஞ்ச நேரமிருந்தால்
இந்த அவசரத்துக்கு
என்ன நடந்து விடப்போகிறது
தயக்கமுறும் நிழல்கள்
பின்னகர
இருளின் வாசம் நம்மீது கவிகையில்
அவிழும் நினைவுகளில்
எது யாரிடம்
எது யாரிடமும் இல்லை
ஒருமித்த ஞாபகங்களை
விலக்கும் கணங்கள்
எதிரெதிர் முனைகளில்
காந்த விசையைப் பெயர்த்தனவா
அறியேன்
எறும்புகளின் வன்முறைகளில்
உண்டா அடையாளமும்
பிரகடனமும்
அவற்றின் சினேகத்துக்கு
இருக்கிறதா பாடலும் இசைக்குறிப்புகளும்
துக்கத்தின் வலியில் சிதறுண்ட
எறும்புகளின் பாதையில்
ஏதேனுமொரு ஞாபகத் துண்டைப்
பார்த்தாயா

## பறவைகளிலும் பூக்களிலும்

உன்னைப்பகிர்ந்தளித்து விட்டுப்
போனாய்
கரைந்து
யாசகனாய் நான்
தவிர்க்க முடியாதவாறு
நம் தனிமைக்குள் ஊடுருவி
நெடும் பயணம் நிகழ்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**EELAM**
**CASH & CARRY**

# WHOLESALERS & DISTRIBUTORS

**Complete Range of**
**Off Licence Items & Soft Drinks**

**Tel: 020 8394 4560** **Fax: 020 8394 4565**

# EELAM CASH & CARRY LTD

**UNIT - 4**

**681 MITCHAM ROAD**

**CROYDON CRO 3YH**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org